ISSN 1391-958X

# சொல்



சொல் ▪ இரண்டாம் காலாண்டு ▪ 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

சொல் ■ இரண்டாம் காலாண்டு ■ 2006

*ISSN 1391-958X*

**அட்டைப்படம் பற்றிய வர்ணனையும் சுருக்கமான பதிவும் :**

இலங்கை மக்களின் வாழ்க்கை நாளாந்தம் இடப்பெயர்வு என்றொரு நெருக்கடியான அம்சத்தையும் கொண்டே இயங்குகிறது. இந்த வேதனையான விடயத்திற்கு அதிகம் முகம் கொடுப்போர் பேண்களாகவே இருக்கின்றனர். குழந்தைகலையும், குடும்பத்தையும் தாங்கும் பெரும் சுமை காரணமாக இந்தக் கொடுமையான சூழலிலிருந்து பெண்கலைக் காப்பாற்ற விரைவில் நாட்டில் சமாதானமும் அமைதியும் ஏற்படவேண்டுமெனச் சகல கோணங்களிலிருந்தும் முயற்ச்சிகள் முன்னெடுக்கப் படவேண்டும். முயற்சியுங்கள்.

**அட்டைப்படம்**

சுமிக்கா பெரேரா

**கௌரவ ஆசிரியை**

பத்மா சோமகாந்தன்

**மொழி பெயர்ப்பு**

நிரஞ்ஜலா அருள்நந்தி
பொன்னையா சாந்தகுமார்

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**

வேலாயுதம் ஜெயசித்ரா

**பின் அட்டை ஓவியம்**

தமயந்தி முத்துகுமாரகே

**சஞ்சிகை வெளியீடு**

பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு
174, அல்விஸ் ஒழுங்கை, காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை
தொலைபேசி : 94-11-5632045, 2690201, 5635900
தொலைநகல் : 94-11-2690192, மின்தபால் : womedia@sltnet.lk
options@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

# நாம் சொல்ல விரும்புவது.....

பெண்கள் சமுதாயத்தின் ஆணிவேர் என்பதைப் பல்வேறு மட்டங்களிலும் அடித்துச் சொல்லப்பட்டிருந்தாலும் நாட்டில் வன்செயல்கள் போர் என்பவற்றின் அசாதாரண சூழ்நிலையால் இந்த ஆணிவேர்கள் பாதிப்புக்குள்ளாகும் அபாயத்தைத் தடுக்கமுடியாமல் அவதிக்குள்ளாகும் அவலத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டியே இருக்கிறது. இவற்றையெல்லாம் நிவர்த்திக்க அமைதியும் சமாதானமுமான சூழ்நிலை மிகமிக விரைவில் உருவாகவேண்டுமென நாம் பிரார்த்திப்பதோடு உழைக்கின்ற இவ்வேளையிலே ஸ்திரமும் திடகாத்திரமும் ஆற்றலும் மிக்க சமூக உருவாக்கத்திற்கு ஒவ்வொரு பெண்ணும் ஆளாகி நிற்கவேண்டிய உண்மையையும் உணர்த்தவே வேண்டும். அந்த ரீதியிலே சில செய்திகளை இந்த இதழில் "சொல்" உங்களோடு பேசுகிறது.

இந்தியாவில் விதவைகள் சமூகம் அனுபவித்த துன்பகரமானதும் கவலைக்குரியதுமான வாழ்வைப் பற்றி ஒழிவு மறைவின்றிப் பிரதிபலிக்கின்ற "WATER", தண்ணீர் என்ற சினிமா பற்றிய நமது கண்ணோட்டம், மே 27 மகளிர் சுகாதார தினம் ஆண் பெண் சமத்துவமின்மையால் பெரும் பாதிப்புக்குள்ளாகும் பாலியல் வாழ்வு, மகளிர் இனவிருத்திச் சுகாதாரம், இனப் பெருக்கம் சம்பந்தமான பிரச்சினைகள் எனப் பல்வேறு வகையான சுவையான அம்சங்களோடு இந்த இதழ் விரிகிறது. மேலும் சுவையூட்டவும், செய்திகளை அறியவும், விஷயங்களை விரிவுபடுத்தவும் நேயர்களிடமிருந்து பல ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.

பெண்கள் தொடர்பான பல விடயங்கள் முன்னுக்குப் பின் முரணாக நம் சமூகத்தில் பேசப்படுகின்றன, எழுதப்படுகின்றன. எனவே இவற்றைப் பற்றி பொதுவாக ஒவ்வொரு மட்டங்களிலும் உள்ள பெண்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர்களுடைய வாயாலேயே கேட்டறியலாம் என்றெண்ணி இங்கு பல பெண்களை அவர்களுடைய கருத்துக்களைச் "சொல்" லவைத்துள்ளோம். தொடர்ந்தும் பலர் எம்மிடம் தமது எண்ணங்களை "சொல்"வார்கள் என நம்புகிறோம்.

"சொல்" எமது பிரச்சனைகளைக் கிளறிப் பார்ப்பது மட்டுமன்றி அவற்றிற்கான தீர்வுகளைப் பற்றி ஆராய்ந்து தீர்மானிப்பதோடும், பெண்கள் தொடர்பான பல செய்திகளையும் தகவல்களையும் திரட்டித் தந்து, முன்னேற்றத்துக்கான முட்டுக் கட்டைகளை இனங்காணும், அவற்றை இலகுவில் வெற்றி கொள்வதற்கான வழிமுறைகளைப் பற்றி அலசும், மேன்மேலும் அவர்கள் வளர்ச்சிபற்றி ஊக்குவிக்கும். இனவிருத்திச் சுகாதாரம் பற்றி பெண்கள் மாத்திரம் அழுத்தமாகச் சிந்தித்தால் மட்டும் போதாது. மனித சமுதாயத்தின் கட்டுக் கோப்பு வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் அக்கறையுள்ள யாவருமே இதனைப் பற்றி உணர்ந்து ஆவன செய்ய முன்வரவேண்டும்.

வைரம் மிக்க நெஞ்சோடு பல திடகாத்திரமான செயல்பாடுகளில் ஈடுபட்டுச் சமுதாயத்தை வழிநடத்திச் சென்ற வீராங்கனைகளின் வரலாறுகள், சரித்திரங்கள் சம்பவங்கள் நம் முன்னே பரந்து கிடக்கின்றன. இவையெல்லாம் நமக்கு மேன்மேலும் பலமூட்டும்.

"இன சாதிமத பேதமின்றி
எல்லோரும் ஓரினம்
எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் இந்நாட்டு மக்கள்" என்ற உணர்வோடு எமது மேம்பாடே "மந்திரமாக" உச்சரிக்கும் இவ்வேள்வியில் பெண்ணினம் ஒன்றிணைந்து சிந்தித்து ஒற்றுமையாகச் செயல்பட தம் திறமைகளையும் ஆற்றல்களையும் பயன்படுத்த வேண்டுமென்பதே எமது பேரவா. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பு

பெண் கல்வி, பெண் சுதந்திரம், பெண் விடுதலை, பெண் சமத்துவம் என்றெல்லாம் சமீப காலமாக மிகவும் அதிகமாக பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றது. இந்த சிந்தனைகள் அண்மையில் தான் ஏற்பட்டனவா? இல்லை, காலாதிகாலமாக வந்ததா? அல்லது இது ஒரு மேற்கத்திய கலாச்சாரத்தின் பிரதிபலிப்பதா?

இதனைப் பற்றித் தங்கள் அனுபவங்களையும் அறிவையும் கொண்ட அபிப்பிராயங்களை சொல்லும்படி ஒவ்வொரு படிநிலையிலுமுள்ள பெண்களிடமும் கேட்டோம். அவர்கள் தமது கருத்தோட்டங்களைச் சுருக்கமாகச் சொல்கிறார்கள். இதோ அவர்கள்...

# பெண்கள் சிலர் தம் கருத்தைச் சொல்கிறார்கள்



"விழுது" என்ற நிறுவனத்தில் கணக்காளராகப்பணிபுரியும் **செல்வி இலஞ்சலிஸ்ா போல்**

பெண்ணியம் தொடர்பான இத்தகைய கருத்துக்கள் காலாதிகாலமாகவோ அல்லது அண்மையிலோ ஏற்பட்டதன்று. மாறாக பெண்ணியம் சம்பந்தமான கருத்துக்கள் அதிகளவில் எழுச்சி கண்டது பாரதியாரின் காலத்தில்தான். தமிழ் சமூகத்தில் காணப்பட்ட பெண்ணின் இழிநிலையைக் (கண்டு உள்ளம் கொதித்தெழ தடைகளை தாண்டி தரணியெங்கும் தலை நிமிர்ந்து வாழ உரம் கொடுத்து ஊக்கம் தந்தது அவரது கவி வரிகள் எனின் அது மிகையாகாது. அவரால் விதைக்கப்பட்ட புரட்சி விதைகள், இன்று முளைத்து அரும்பாகி ஆழ வேரூன்றி கிளை பரப்பி பெரும் விருட்சமாய் உள்ளது என்பதே உண்மையாகும்.

முற்காலத்தில் பெண்கள் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்தனர். எத்துறையிலும் பெண்கள் பெரியளவில் பிரகாசிக்கவில்லை. திருமணம் என்ற ஒன்றே அவர்கள் வாழ்வின் பொருளாக இருந்தது. "அடுப்பூதும் பெண்ணிற்கு படிப்பு எதற்கு" என்ற வகையில் அச்சமூகம் செயல்பட்டு வந்தது. இது தொடர்பாக பெண்களே அக்கறையின்றி இருந்தனர் என்று கூடச் சொல்லலாம். பெண் விடுதலை, சமத்துவம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிற்று. இதனால் காலாதிகாலமாக பேசப்பட்டு வருகின்றது என்று கூறமுடியாது.

அதேவேளை மேற்கத்திய கலாச்சாரத்தின் பிரதிபலிப்பு என்றும் கூறமுடியாது. மாறாக எம் பெண்களின் அவநிலையை கண்டுணர்ந்த புரட்சி கவி

"எட்டையும் பெண்கள் தொடுவது தீயேன்று எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்

வீட்டுக்குள்ளே என்னைப்பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்." என்றும் பட்டங்கள் பெறுவதும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்களுக்கு உரிமை உண்டு என்ற கூற்றின் வாயிலாகவும், வீட்டுக்குள் அடங்கி கிடந்த பெண் சமூகத்தின் உரிமைகளை தட்டிக் கேட்டு பெண்களையும் தட்டிக் கொடுத்தார். அதுமட்டுமன்றி ஆணுக்கு பெண் சரிநிகர் சமானம் என்று அறை கூவல் விடுத்தார். பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

எனவே பல கட்டுகளுக்குள் வாழ்ந்த எம் தமிழ் சமூகத்தின் பெண்கள் கூட பலதுறைகளில் புதிய வகையில் பரிணமிக்கின்றனர். நாட்டின் தலைவர்களாய், தொழில்துறையில் உயர் பதவிகள் வகிப்பதிலும் ஆசிரியர்களாக வக்கீலாக விமானியாக எழுத்தாளர்களாக கவிஞர்களாக இன்னும்சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆகவே பெண் கல்வி, சுதந்திரம், விடுதலை, சமத்துவம் என்பன மேற்கத்திய கலாச்சாரத்தின் ஊடுருவலோ அல்லது காலாதிகாலமாக பேசப்பட்டு வந்த விடயமோ அல்ல. மாறாக தற்கால சிந்தனையாளர்கள் பெண்ணுக்குள் உறங்கிக்கிடந்த தங்களுள்ளே மறைந்து கிடந்த பெண்ணினத்தின் திறமையை, ஆற்றலை வெளிக்கொணர்ந்தனர். இதை சவாலாக கொண்ட பெண்ணினமும் சாதனைப் படைத்து சாதித்துக்காட்டி விட்டது என்பதே உண்மை. ஏனெனில் எம் கலாச்சாரம் மீறப்பட்டும் பண்பாடு மறக்கப்பட்டும் விடாது. மாறாக எம் பண்பாட்டு கலாச்சாரம் என்பன பேணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் முடங்கிக் கிடந்த பெண்கள் சமூகம் கிளர்ந்தெழுந்து தாமும் சமைக்க மட்டுமன்றி சாதிக்கவும் பிறந்தவர்கள் என எண்பிக்கப்படவும் செய்ததால் நிச்சயம் இது மேற்கத்திய பிரதிபலிப்பு என்று கூறமுடியாது. இது முற்றிலும் எமது சுயத்தை தாங்கிக் கொண்டு ஆற்றல்களை வெளிக்கொணர்ந்தவொன்றே பது என் அபிப்பிராயமாகும்.



**செல்வி எச். அனுசியா**
கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவி
கல்வித்தராதரம் உயர்தரவகுப்புப் பரீட்சை எழுதிவிட்டு மேற்கொண்டு கல்வியைத் தொடரக் காத்திருக்கிறார்.

தற்கால உலகில் பெண்களைப்பற்றிய விழிப்புணர்வுகள் நம்மத்தியில் மேலோங்கி வருகின்றது. அவை பின்வரும் வழிகளில் எடுத்துக்காட்டப்படுகின்றன. இவைகளில் தீவிரமானவை மேலைத்தேய நாடுகளிலிருந்து கீழைத்தேய நாடுகளுக்கும் புகுத்தப்பட்டன. எப்படியாயினும் இப்படியாக கட்டுப்பாடுகளும், விதிகளும் ஏனைய நாடுகளிலும் பார்க்க நமது நாட்டிலும், நமக்கு அண்மையில் உள்ள இந்திய நாட்டிலும் காணப்படுகின்றன.

பெண் விடுதலையைக் கருத்திற் கொண்டால் தற்காலத்தில் நாட்டு விடுதலைக்காகவும், வேறு பல சுதந்திரத்திற்காகவும் பெண்கள் விடுதலைப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். முன்னைய காலத்தில் வீடுகளில் அடைக்கப்பட்ட பெண்கள் தற்பொழுது விண்வெளியில் பறந்து தமது ஆய்வினை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றனர். உலக வாழ்க்கையில் பல நாட்டங்களைத் தேடவும், பற்பல நூல்களைக் கற்கவும், பல நாடுகளுக்குச் சென்று புதுமைகளைப் புரிந்திடவும் வீட்டிலிருந்து விலகி பொந்தில் வாழ்வதை வீரப்பெண்கள் ஒழித்திடுவார்கள் என்று பாடினான் பாரதி. பாரதிகாண முயன்ற புதுமைப்பெண்ணாக கல்பனா செளளா என்ற பெண்மணி விண்வெளிக்குச் சென்று பாரதியின் கனவை நனவாக்கினாள்.

பெண் சுதந்திரத்தை எடுத்தியம்பின் முன்னைய காலத்தில் ஆடவர்களுடன் பேசக்கூடாது, படிக்கக் கூடாது, வீதியில் உலாவமுடியாது போன்ற கருத்துக்கள் கீழைத்தேய நாடுகளில் காணப்பட்டன. வீடுபெருக்கவும், குழந்தைகளைப் பெறுகின்ற இயந்திரமாகவும் அக்காலப் பெண்கள் சித்தரிக்கப்பட்டார்கள். ஆனால் இவற்றையெல்லாம் வளர்ந்து வருகின்ற வீரப்பெண்கள் முறியடித்து பட்டங்கள் பல பெற்று பலநாடுகளுக்குச் சென்று தமது தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். பெண் சமத்துவத்தை நோக்கினால், ஒரு ஆணுக்கு என்ன உரிமையும், மரியாதையும் சமூகத்தில் வழங்கப் படுகின்றதோ அதே உரிமையும், மரியாதையும் மேலைத்தேய நாட்டுப் பெண்களுக்கு வழங்கப்படுகின்றது. இருப்பினும் மேலைத்தேய நாடுகளில் ஆண்களுக்கு ஆதிக்கம் அதிகம் இல்லையாயினும் கீழைத்தேய நாடுகளில் அவ்வாதிக்கம் மிகுந்து காணப்படுகின்றது.

பெண்கல்வியை எடுத்துக் கூறின் முன்னைய காலத்தில் கீழைத்தேய நாடுகளில் பெண்கள் வீட்டைக்காக்கவும், விளக்கேற்றுவதற்காகவும் பணிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் இக்காலத்தில் கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக, அரசியல் போன்ற துறைகளில் பிரவேசித்து பல சாதனைகள் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள். தெற்காசிய உபகண்டமாகிய இந்திய நாட்டின் அரசியலை மாற்றி அமைத்த பெருமை இந்திரா காந்தி அம்மையாருக்கே உரியது. இவர்களுடைய கல்வி மூலம் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

பெண்களுக்கு மட்டும் உரித்தான குணங்கள் சில காணப்படுகின்றன. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற குணங்கள் பெண்களுக்கு மட்டுமே உரியது என வற்புறுத்துகிறார்கள். பெண்களுக்கு பலம் தான் குறைவு. ஆனால் அவர்களிடமுள்ள துணிச்சல் ஒரு ஆணுக்கு உள்ளதைவிட அதிகம். இது மகாத்மா காந்தியின் கூற்று என்று கூறப்படுகிறது.

மேற்போன்ற விடயங்களை நோக்குமிடத்து பெண் விடுதலையின்மை, பெண் சுதந்திரமின்மை, பெண் சமத்துவமின்மை, பெண்ணியமின்மை, பெண்கல்வியின்மை பற்றிப் பல ஆர்வலர்களால் பலவாறாகப் பேசப்பட்டும், எழுதப்பட்டும் இருப்பினும் இந்த அவலநிலை பல நாடுகளிலே இன்னமும் காணப்படுகிறது. கீழைத்தேயமான இலங்கையில் தான் முதல் பெண் பிரதமர் தோன்றியிருப்பினும் பெண்களுக்கான சமவாய்ப்பும் சுதந்திரமும் மேலைநாடுகளில் சிறிது முன்னேற்றம் அடைந்ததாகவே காணப்படுகிறது. பெண்களின் பங்களிப்புகளும், பொறுப்புக்களும் எவ்விதத்திலும் ஆண்களின் பொறுப்புக்கள் பங்களிப்புக்களிலிருந்து குறைந்ததாகவே காணப்படவில்லை. தற்போது சிறுசிறு முன்னேற்றங்களுடன் காணப்படினும் இந்த அபிப்பிராயங்கள் நீண்டகாலமாகவே எம்மத்தியில் இருந்து வருகின்றது என்றே கூறலாம்.

சங்கீத ஆசிரியையாக இசைத்துறைக்குத் தன்னை அர்ப்பணித்துப் பணிசெய்து கொண்டிருக்கும் **செல்வி பிரபாலினி கந்தசாமி** இப்படிச் சொல்கிறார்.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்னும் முதுமொழிக்கேற்ப நாம் எல்லோரும் மானிடப்பிறப்பை பெற்றுள்ளோம். அதிலும் தாய்மை என்ற புனிதத்தைக் கொடுக்கும் பெண்களாய்ப் பிறந்துள்ளோம். மிகச் சிலகாலமாகவே பெண்களாகிய எமக்கு பெண்சமத்துவம், பெண்விடுதலை, பெண்சுதந்திரம் என்பவை சரியான முறையில் கிடைக்கின்றதா? என் பேசப்பட்டுவருகின்றது. இப்படி ஒரு ஆர்வம் மிக அண்மையில் தான் ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் நம் மூதாதையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் பெண்கள் வெளிநடப்புகளை அறியாமல் குடும்ப வாழ்க்கையுடன் ஒன்றிப்போய் வாழ்ந்து வந்துள்ளனர். பெரும்பாலும் அக்காலங்களில் ஆண்கள்தான் தொழிலுக்குச் செல்வார்கள். ஆகவே பெண்கள் அவர்களின் குடும்பத்தலைவனின் ஊதியத்திற்கு ஏற்றவாறு வாழ்க்கையை நடத்திச் சென்றார்கள்.

சில குடும்பங்களில் கூட்டுக்குடும்பம் என பல சொந்தங்கள் ஒன்றாக ஒரு வீட்டில் வாழ்ந்தனர். அத்தகைய ஒரு குடும்பத்தில் அக் குடும்பப் பொறுப்பை ஏற்பவள் பெரும்பாலும் பெண்ணாக இருந்த காரணத்தினால் அக் குடும்பத்தில் பல சிக்கல்கள் எழுந்திருக்க சந்தர்ப்பங்கள் அமைந்தன. ஏனெனில் பல சொந்தங்கள் ஒன்றாக வாழும்போது கருத்து வேறுபாடுகள் நிலவும். இவற்றை அனுசரித்து அக்குடும்பத்தை ஒற்றுமையாக வழிநடத்தும்போது பொறுமை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற குணங்கள் தானாகவே வருகின்றன. அது தவிர வசதி வாய்ப்புகள், நாகரீகங்கள் என்பன வளர்ச்சியடையாத காலம் என்பதால் அவர்கள் குடும்பத்தை ஒட்டியதாகவே அமைந்திருந்தது. ஆகவே அக்கால கட்டங்களில் இப்படியான ஒரு ஆர்வம் நிச்சயம் ஏற்பட்டிருக்க முடியாது.

விஞ்ஞானமும் நாகரீகமும் வளர்ச்சி அடைய ஆரம்பித்ததும் குடும்ப சூழ்நிலைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. செலவுகள் அதிகரிக்க ஆரம்பித்ததும் கூட்டுக் குடும்பம் தனிக் குடும்பங்களாக மாறின. இதன் நிமித்தம் இருவரும் தொழிலுக்கு செல்லும் காலம் உருவானது. அவ்வாறு பெண்கள் தொழிலுக்கு செல்லும் சமயம் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படுவதால் பெண்ணியம், பெண் விடுதலை போன்ற விடயங்களை ஆலோசிக்க ஆரம்பித்தனர்.

தற்போதைய சூழலில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர் என்பதை ஆராலும் மறுக்க முடியாது. ஆனால் ஒரு விடயத்தை நாம் மறக்கக்கூடாது.அதாவது பெண்களாகிய நாம் இவ்வாறு சிறந்து விளங்க ஆண்களும் நிச்சயம் துணையாக உள்ளனர். இவ்வாறு பெண்கள் எல்லாத் துறைகளிலும் தடைகளைத் தாண்டி மிளிர்வதே மிகப் பெரிய பெண் சுதந்திரமாகும்.

தற்காலப் பெண்களுக்கு தைரியம் அதிகமாகவே உள்ளது. அத் தைரியம் சில சமயங்களில் நல்ல முறையில் அமைகின்றன. சிந்தித்து செயற்படாதவிடத்து அவை அசட்டுத் தைரியமாக மாறி பல தீங்குகளை விளைவிக்க முற்படுகின்றன. அப்போது பெண் சமத்துவம் கிடைக்கவில்லை என எண்ணுகிறோம். ஆகவே அவ்வாறான சந்தர்ப்பங்கள் உருவாகாமல் இருக்க நமது மனநிலையை சீர்படுத்த இசை கேட்டல், தியானம் அல்லது நமக்கு பிடித்த விடயங்களில் மனதை செலுத்தும் போது ஒரு தெளிவான எண்ணம் பிறக்கும்.

நம் மூதாதையர் காலத்துடன் ஒப்பிடும்பொது நமக்கு எல்லாவிதமான கட்டுப்பாடான சுதந்திரம் கிடைக்கின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனது கருத்துப்படி ஆண்களுக்கு பலமாக பெண்களும் பெண்களுக்கு பலமாக ஆண்களும் இருந்து செயல்படுவோமானால் இவ்வாறான கருத்துக்கள் எழ சந்தர்ப்பங்கள் அமையாது.



**திருமதி சிவகுமாரி மனோகரன்**
(ஆசிரியை)
நீர்கொழும்பு
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் கடமையாற்றும் ஆசிரியர்

இன்று பெண் சுதந்திரம், பெண் சமத்துவம், பெண் விடுதலை, பெண் கல்வி, பெண்ணியம் என்ற விடயங்கள் உலகமெங்கும் பேசப்பட்டு வருகின்றது. பெண்ணிலைவாதிகள், பெண் அமைப்புக்கள் என்ற வரையறைக்குள் மட்டுமன்றி எல்லோர் மத்தியிலும் இவை பேசி அலசி ஆராயப்படுகின்றன.

இவ்வாறான கருத்தியல் விடயங்கள் காலாதிகாலமாக எங்கள் வரலாற்றில் இருந்து வந்த சிந்தனையா? அல்லது வேற்று நாட்டு கலாசாரத்தின் ஊடுருவலின் பிரதிபலிப்பா? என்ற கேள்வி தோன்றும் வேளையில் நாம் சற்று பின்நோக்கிப் பார்ப்போமானால்,

ஆதி மனிதன் கூட்டமாக வாழ்ந்த காலத்தில் பெண்ணுக்கும் ஆணுக்கும் உரிய கடமைகள், பொறுப்புக்கள் என்பன குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டன. அவற்றை அவர்கள் சரி சமமான முறையில் பகிர்ந்து செய்தார்கள். ஆண், பெண் என்ற பேதம் அவர்களிடையே காணப்படவில்லை.

இதற்கு பிற்பட்ட காலத்தில்தான் தாய் வழி சொத்துரிமை சமுதாயம் ஒன்று காணப்பட்டது. இந்தியாவிலே சிந்துவெளி நாகரிகம் நிலவிய காலத்தில் தாய் வழி சமூகம் ஒன்று நிலவியதற்கும் பெண் தெய்வ வழிபாடுகள் நிலவியதற்குமான போதிய சான்றுகள் கிடைத்துள்ளன. வேதகாலத்தில் பெண்கள் நன்கு படித்தவர்களாகவும். வேத சூத்திரங்களை இயற்றியவர்களாகவும் காணப்பட்டனர்.

காலப்போக்கில் நிலப் பிரபுத்துவ காலத்தில்தான் இந்நிலை மாற்றம் பெறத் தொடங்கியது. கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மக்கள் தனியலகுகளாகப் பிரியத்தொடங்கி தனது நிலம் சொத்து உடைமை என்ற வரையறைக்குள் வாழத்தலைப்பட்டனர். இவ்வேளையில்தான் பெண்மீது ஆதிக்கம் செலுத்தும் ஆண்வர்க்கம் ஒன்று தோன்றியது.

ஆண் வெளியில் சென்று வேட்டையாடுதல், உணவு தேடுதல் என்பவற்றில் ஈடுபட பெண்ணானவள் சமையல், பிள்ளை பராமரிப்பு என்பவற்றிற்கு மட்டுமே உரியவள் என்ற மனப்பாங்கு ஆண்கள் மத்தியில் வளரத் தொடங்கியது. தந்தையின் சொத்துக்கள் தனது மனைவி மூலம் பிறந்த மகனுக்கே என்ற நிலை இதனை மேலும் வலுப்படுத்தியது. பெண்ணும் தான் இல்லத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டவள் என்று திடமாக எண்ணத் தொடங்கியதால் அவளிடமும் ஒரு அடிமை உணர்வும் ஏற்பட்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மதங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கிய காலத்தில் பெண்கள் உயர்நிலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சக்தி வழிபாடு, அர்த்த நாரீஸ்வரர் தோற்றம் என்பன இதற்கு சான்று பகர்கின்றன.

ஆனால் புராண இதிகாச காலங்களில் பெண்களின் நிலை மீண்டும் தாழ்த்தப்பட்டது, கணவனை கடவுளாக வழிபடும் தன்மை ஆரம்பமானது. பெண்ணின் கற்பு என்பதற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து வந்த இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் இந்நிலையே காணப்பட்டது. பெண்ணானவள் தாழ்த்தியே கணிக்கப்பட்டாள்.

காலமும் செல்லச் செல்ல பெண்ணானவள் இந்த அடக்கு முறைகளை உணர்ந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ அன்று முதல் இன்று வரை போராடித் தான் வருகின்றாள். தாமும் ஆண்களுக்கு சமமான உரிமைகளைப் பெற்று வாழ்தல் வேண்டுமென்ற பலமான எண்ணம் ஒடுக்கப்பட் பெண்கள் மத்தியில் இருந்து தான் வந்திருக்கின்றது. கடந்த நூற்றாண்டில் தான் இது வலுப்பெற்றது எனலாம். இது ஒரு ஆலோசனைப் பிரச்சனையாகும்.

**பெண் சுதந்திரம், சமத்துவம், கல்வி, விடுதலை, பெண்ணியம் என்பவற்றை மேல் நாட்டு கலாசாரத்தின் பிரதி பலிப்பாக கருதாது அவற்றை எமது இனம், மொழி, பண்பாட்டு கலாசார பாரம்பரியங்களுக் கேற்ப உள்வாங்கி உயர்வடைய வேண்டும்.**

மேல்நாட்டுப் பெண்களும் அன்றிலிருந்தே ஆணாதிக்கத்திற்கு எதிரான உரிமைக்குரல் கொடுத்து வந்திருக்கின்றார்கள். இங்கு பெண் சுதந்திரம், சமத்துவம் கல்வி, விடுதலை, பெண்ணியம் என்பன காலாதிகாலமாக எங்கள் வரலாற்றில் இருந்து வந்த சிந்தனைதான். ஆனால் மேல்நாடுகளில் தான் இவற்றிற்கான உருவம் கொடுக்கப்பட்டது என்பது பொருந்தும் .

அதாவது வரைவிலக்கணப் படுத்தப்பட்டது எனலாம். 1792ம் ஆண்டு மேரி வுல்ஸ்ரோப் கிராப் என்ற பெண்மணி பிரித்தானியாவில் பெண்களின் உரிமைகளை நிலை நிறுத்துவது என்ற தொனியில் குரல் கொடுத்தார். 1893 இல் நியூசிலாந்து பெண்களின் உரிமைப் போராட்டத்தில் உலகில் முதல் முதலாக பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. 1917 இல் உலகில் எல்லா நாடுகளிலும் மார்ச் மாதம் 8ந் திகதி பெண்கள் தினமாக பிரகடனம் செய்யப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட பெண்ணிலை வாதமானது. பெண்ணியம் (Feminism) என்று பரிணமித்து வளர்ச்சி பெற்று வருகின்றது. ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் இது பெருமளவில் பேணப்படுகின்றது.

எனவே பெண் சுதந்திரம், சமத்துவம், கல்வி, விடுதலை, பெண்ணியம் என்பவற்றை மேல் நாட்டு கலாசாரத்தின் பிரதி பலிப்பாக கருதாது அவற்றை எமது இனம், மொழி, பண்பாட்டு கலாசார பாரம்பரியங்களுக் கேற்ப உள்வாங்கி உயர்வடைய வேண்டும்.



குடும்பத் தலைவியாக வாழ்ந்து கொண்டு பல சமூக சேவைகளுக்கு முகம் கொடுத்துவரும் **திருமதி திலகவதி ஈஸ்வரன்** என்ன சொல்கிறார்?

இன்றா நேற்றா பெண் சுதந்திரம் பேசப்படுகிறது? இல்லையே. இரண்டு நூற்றாண்டுகளை விட்டு விட்டால் அதற்கு முன் பெண்ணின் நிலைமை பரிதாபகரமாகத்தான் இருந்திருக்கிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

சிறிய உதாரணங்களைக் கொண்டே இதை நிறுவி விடலாம். கணவனை இழந்து விட்டால் பெண்ணுக்கு பெயர் கைம்பெண். சிறுமையுற்றவள் என்பது இச்சொல்லின் பொருள். மனைவியை இழந்தவளோ சிறுமை அடைவதேயில்லை. முடிந்தால் மறுநாளே அவன் கல்யாண மாப்பிள்ளை ஆகி விடுகிறான். ஏன் கையாண் என்ற சொல் யாருக்கும் தெரியாமலே இருக்கிறது. விதவை என்ற சொல்லுக்கு ஆண்பால் சொல் தமிழில் இல்லை. நம் நாட்டு இலக்கியங்களில் அநேகமானவை பெண்களின் கண்ணீர்க் காவியங்கள். கணவனின் இம்சைகளை மனமுவந்து ஏற்றுக் கொண்டதாலேயே பெண்களின் பெருமை பேசப்பட்டது. கொண்டு வந்த பழத்தை பகிர்ந்து உண்ணுக என்ற தாயின் வாசகத்தை சாதமாக்கிக் கொண்ட கதையும் நம்மிடம் தான் உண்டு. தவறான நடையினால் தொழு நோயாளியான கணவனை கூடையில் வைத்துத் தூக்கிச் சென்று கற்புக்கரசி என்று பெயரெடுத்த பெண்ணும் நம் நாட்டுப் பெண்ணே.

இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் குறளெழுதிய வள்ளுவன் மகளிரை சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் என்று எழுத வேண்டுமென்றால் அன்றே பெண்ணை தன் சுயநலத்திற்காக ஆண் சிறைவைத்தான் என்று தானே கொள்ள வேண்டியிருக்கிறது இது மட்டுமா பட்டினத்தாரும்

"காதென்று மூக்கென்று கண்ணென்று
காட்டி என் கண்ணெதிரே
மாதொன்று சொல்லி வர மாயை
தன்னை மறலி
(இமன்) விட்டதூதென்று எண்ணாமல்"
என்றல்லவா பாடினார்.

தனக்கென்று ஒரு தனிச் சட்டம் வகுத்தது அன்றைய ஆண் சமுதாயம். தவறி விழும் பெண்ணை வேல் கொண்டு குத்துவது போல் தேடி எடுக்கப்பட்ட சொற்கள் வேசி, தாசி, விபச்சாரி என்பவை. ஆண் மகன் எப்படி வாழ்ந்தாலும் அவனையும் புண்படுத்த ஏன் அன்றைய சமுதாயம் ஆண்பாற் சொற்களே கண்டுபிடிக்கவில்லை? துய்ப்பதற்கு மாத்திரம் பெண்ணை ஓரம் கட்டி வைத்திருந்தார்கள். அன்று பெண்ணுக்கு கொஞ்சமாவது சுதந்திரம் இருந்திருந்தால் ஔவையாரும், புனிதவதியாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளாடும் பருவத்தை வரம் கேட்டு பெற்றிருக்க மாட்டார்களே் வேதகாலத்திலேயே பெண்ணை தாயாக தெய்வமாக போற்றி இருந்தாலும் அது அக்காலத்திலேயே மாண்டு விட்டது. பின் வந்த பல ஆயிரம் ஆண்டுகள் ஆண்கள் பெண்ணை அடிமையாக, ஆணின் வெறிக்கு மட்டும் பலியாகும் வலுவற்ற சந்ததியை மட்டும் உருவாக்கும் கருவியாக உபயோகித்து வந்தார்கள் என்றால் அது மிகையாகாது. வீழ்ச்சியை அறியாத மயக்கம், எழுச்சியை கனவிலும் நினைக்காத பேதமை, பொருளாதார சுதந்திரமற்று முதுகொடிந்து முடங்கிக் கிடந்தாள் அன்றைய பெண்.

கணவன் இறந்தவுடன் மனைவியை அவனுடன் வைத்து எரிக்கும் உடன்கட்டை என்ற வழக்கம் இருந்தது. அவளுக்கு வானுலகம் கிட்டும் என்று நம்பப்பட்டது. மனைவி இறக்கும் பொழுது கணவனும் வானுலகம் வரலாமே என்று கேட்க அவளுக்கு துணிவிருக்கவில்லை.

சின்ன சின்ன உரிமைகளைக் கூட கேட்க முடியாத காலகட்டத்தில் வாழ்ந்த பெண்ணுக்கு சம அந்தஸ்து பற்றியோ, சுதந்திரம் பற்றியோ நினைக்கக் கூட வாய்ப்பில்லாத போது ஏதாவது பேசவா முடியும்.

அந்தக் காலத்தில் யாருமே பெண் விடுதலை பற்றியும் அவளது உணர்வுகளைப் பற்றியும் சிந்திக்கவில்லையா என்ற கேள்வி எழுந்தால் ஆம் இவற்றை பற்றி திட்ட வட்டமாக இறைவனின் சட்டம் சொன்ன பெருந்தகை ஒருவர் உண்டு. அவர்தான் இறைதூதர் முகம்மதுநபி ஸல்லல்லாகு அலைஹி வஸல்லம் அவர்கள்.

சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு அரேபியாவில் தோன்றிய இஸ்லாம் மார்க்கத்தில் பெண் பற்றி கீழ்கண்டு சுதந்திரக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

கணவன் தன் மனைவியைத் துன்புறுத்தாத காலத்தில் கூட மனைவிக்கு பிடிக்காவிட்டால் அவள் (தலாக்) விவாகவிலக்கு கேட்கலாம். "நபிமொழி'

இஸ்லாம் மார்க்கத்தில் மனைவி ஒரு கணவனுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டுமேயன்றி அடிமையாக இருக்க வேண்டியதில்லை. கல்வி கற்பது ஆண், பெண் இருபாலார்க்கும் கடமையாகும்.

பெற்றோரே தம்மகளை ஒரு மாப்பிள்ளைக்கு மணம் முடித்து வைத்தாலும் பெண் விரும்பாவிட்டால் அத்திருமணம் செல்லாது.

புகாரி ஷரீ/ம் (ஆதாரம் "முண்டாசக் கவிஞரின் முஸ்லீம் நேசம் - மானா மக்கீன்")

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற வாதத்தை வேரோடு தகர்த்து பெண்ணுக்கு ஆன்மாவும் அறிவும் உண்டு என அன்றே உணர்த்தியவர் முகம்மது நபி அவர்கள்.

பல ஆயிரம் ஆண்டுகள் அடக்கி ஆண்ட ஆண் வர்க்கத்தை இப்பொழுது தான் நாம் பெண் சுதந்திரம், பெண்ணியம், சமநிலை என்று சற்றுச் சீண்டிப் பார்க்கிறோம். ஆம் எங்கோ ஒரு விடிவெள்ளி தெரிகிறது. எனப்பல ஆதாரங்களோடு விரிவாக விஷயங்களை எடுத்துக் கூறுகிறார் திருமதி திலகவதி ஈஸ்வரன்.

**பத்மா சோமகாந்தன்**

# பெண்

பெண்
மனதை கொள்ளை கொள்ளும் பாடலின்
பாடல் வரிகள் மட்டுமா?
வர்ணச் சித்திரத்தில்
கீறப்படும் உருவம் மட்டுமா?
பாடல் வரி இனிமையின்
தாளம் மட்டுமா?

பெண்
வாய்மையின்
ஒரு கைவிலங்கு மட்டுமா?
கலாசாரத்தின் ஓர் அங்கம் மட்டுமா?
விழுமியத்தின்
ஓர் அடையாளம் மட்டுமா?

பெண்
பாலியில்
விலைபொருள் மட்டுமா?
அத்தியாவசிய
சேவைப் பொருள் மட்டுமா?
எண்ணத்தின் படி
கருத்துரைக்க முடியாத
ஓர் ஊடகம் மட்டுமா?

பெண் சகலரின்
விருப்பு வெறுப்புகளுக்கு இணங்க
செயல்பட வேண்டிய
ஈன இரக்கம் அற்ற இயந்திரம் மட்டுமா?



**சாந்தனி குமாரி ஹேரத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்தியாவின் விதவைகள் சமூகம் அனுபவித்த துன்பகரமானதும் கவலைக்குரியதுமான வாழ்வை ஒழிவுமறைவின்றி பிரதிபலிக்கின்ற

# WATER

'FIRE" "EARTH" WATER என்பன தீப்பா மெத்தா என்ற இந்திய கனேடிய சினிமா கலைஞரின் மூன்று திரைப்படங்களாகும். மரபுவழி நம்பிக்கையினதும் நவீன அறிவியலினதும் அடிப்படை வஸ்துக்களான நீர், நெருப்பு மற்றும் பூமியைச் சுற்றி தன்னுடைய மரபுக்கதைகளை கட்டியெழுப்புவதன் மூலம் நிகழ்கால சமூக உறவுகளை ஒழிவுமறைவின்றிப் பார்க்கக்கூடிய காவியமொன்றை எமக்கு நிர்மாணித்துத் தர அப்பெண் முயற்சிக்கிறாள்.

1996இல் இவருடைய "FIRE" திரைப்படத்தையொட்டி எழுந்த பரபரப்பு மெத்தாவுக்கு பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தது. எனினும் அவர் 1975இலிருந்து சினிமாத் துறையில் சம்பந்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் சாதனை மற்றும் சிறுவர் திரைப்படங்களை இயற்றிய இவர் 1991ல் 'Sam and Me' எனப்படும் மரபுக்கதை திரைப்படத்திற்காக பிரான்சின் கான்ஸ் (Cannes) திரைப்பட விழாவில் தங்கக் கமரா (Camera Do'r) வுக்கான விருதினை வென்றார். 1996ல் இயற்றிய "FIRE" திரைப்படம் சமகால இந்தியாவில் பாரம்பரிய வட இந்திய குடும்பக் கட்டமைப்பினுள் நிலவும் வன்முறை, தீய குணங்கள் பாலியல் தொல்லைகள் மற்றும் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் என்பவற்றை வெளிச்சம் போட்டு காட்டியது. 1998ல் இயற்றிய EARTH 1947ல் இந்தியாவும் பாகிஸ்தானும் பிழவுபட்டுச் சென்றதன் பாரிய சமூக - அரசியல் நகர்வை பாசி சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒரு சிறுமியின் பார்வையினூடாக விபரித்தார். 2005 ஆண்டில் இயற்றிய WATER திரைப்படம் 1938ல் இந்தியாவில் விதவைகள் அனுபவிக்கும் துன்பகரமானதும் கவலைக்குரியதுமான வாழ்வை ஒழிவுமறைவின்றி பிரதிபலிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீப்பா மெத்தா இயற்றிய இரண்டு திரைப்படங்கள் அதிஷ்டவசமாகவோ துரதிஷ்டவசமாகவோ இந்தியாவில் பெரும் பரபரப்புக்குக் காரணமாயின. "FIRE" திரைப்படம் திரையிடப்பட்ட திரையரங்குகளை தீயிட்டுக் கொழுத்தும் அளவிற்கு டில்லி, பம்பாய், பூனாய் மற்றும் சூரத் சினிமா பார்வையாளர்கள் வன்முறையாக நடந்து கொண்டனர். இத்திரைப்படத்தின் மூலம் மெத்தா இந்தியப் பெண்களிடையே லெஸ்பியன் (ஒருபால் புணர்ச்சியுள்ள பெண்களின்) நடத்தையை பிரபல்லியப்படுத்த முயற்சிப்பதாகக் கடும்போக்குள்ள இந்துக்களை அரசியல் சக்திகளால் வழிநடத்திய கலகக்காரர்கள் வாதிட்டார்கள்.



இரு சகோதரர்களை மணந்துள்ள பெண்கள் இருவர் தத்தமது கணவர்மாரின் கொடுமைகள் மற்றும் கவனயீனத்தின் மத்தியில் அவ்விருவரும் ஒருவரையொருவர் அணுகும் விதத்தை மிகவும் ஆழமாக விஸ்தரித்த "FIRE" திரைப்படம் பாலியல் நிலைக்குத்தள்ளி தோல்வியடையச்செய்ய எடுத்த சகல முயற்சிகளையும் தோல்வியடையச் செய்தது. அனைத்துலக ரீதியில் விமர்சனத்தையும் பார்வையா-ளர்களின் பாராட்டையும் பெற்ற "FIRE" திரைப்பட ஒளிநாடா அதுவரையில் இந்தியாவில் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டுள்ள ஒளிநாடாவாகக் காணப்பட்டது.

தீப்பா மெத்தா இயற்றிய இரண்டு திரைப்படங்கள் அதிஷ்டவசமாகவோ துரதிஷ்டவசமாகவோ இந்தியாவில் பெரும் பரபரப்புக்குக் காரணமாயின.

1988 ஆம் ஆண்டில் இந்தியாவின் பவநகரத்தில் WATER திரைப்படத்தை இயக்கும் பணிகளை ஆரம்பித்த மெத்தா அந்த முடிவின் பிரதிபலன்களை அறிந்திருக்கவில்லை. இந்தியாவின் மத்திய அரசிடமிருந்தும் பவநகரில் அமைந்துள்ள மாநில அரசிடமிருந்தும் மெத்தா அனுமதி பெற்றார். தன்னுடைய திரைப்படத்தின் படப்பிடிப்பைச் செய்யத் தீர்மானித்திருந்த தினத்திற்கு முந்திய தின இரவு அடுத்த நாளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்த போது, அவ்விடத்திற்கு அத்துமீறி நுழைந்த சுமார் 2000 பேர் அனைத்தையும் தீயிட்டுக் கொழுத்தினர். தீபா மெத்தாவின் உருவத்தையொத்த பொம்மை உருவங்களுக்கு அன்றைய தினமும் அடுத்தடுத்த தினங்களிலும் பகிரங்க இடங்களில் தீ வைக்கப்பட்டது. மெத்தாவுக்கும் அவருடைய திரைப்படத்தில் பணியாற்ற வந்திருந்தவர்களுக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. திரைப்படத்தை இயக்குவதற்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் தான் சந்தித்த பாரிய பண நட்டம் என்பவற்றைக் கருத்தில் கொண்ட மெத்தா டில்லிக்குச் சென்று பொறுப்புவாய்ந்த நபர்களுடன் கலந்துரையாடி அனைத்தும் தணிக்கப்பட்டுள்ளதாக எண்ணி பவநகரத்தை வந்தடைந்தார். எனினும் படப்பிடிப்பு தொடங்கிய சில மணித்தியாலங்களுக்குள் அங்கு வந்த மாநில அரச உத்தியோகத்தர்கள் இத்திரைப்படம் காரணமாக அவர்களுக்கு பவநகரில் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட முடியாததால் திரைப்படத்தை இயக்கும் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு அறிவித்தனர். 1938ல் இந்தியாவில் விதவைகள் தொடர்பாக நிலவிய மனிதநேயமற்ற சமுதாயச் சிந்தனைகளையும் நடத்தைகளையும் பிரதானமாகக் கொண்ட திரைப்படமொன்றை இயக்குவதால் மேற்கத்திய – அடிவருடியான மெத்தா இந்திய நாட்டையும் இந்துபக்தர்களையும் அவமதிப்பதாக இம்முறை திரைப்படத்திற்கு எதிரானவர்கள் தெரிவித்துள்ளனர். அன்றுபோல் இன்றும் ஏன் 21 ஆம் நூற்றாண்டிலும் கடும்போக்குள்ள இந்துப் பக்தர்களிடையே விதவைகள் குறித்த சிந்தனைகள் மற்றும் நடத்தைகளில் மாற்றம் ஏற்படவில்லை என்பது மெத்தா அவர்களின் கருத்தாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான இடையூறுகளின் பின் மெத்தா WATER திரைப்படத்தை இயக்கும் திட்டத்திலிருந்து சில வருடங்கள் விலகியிருந்தார். இறுதியில் அதாவது 2003ல் இலங்கைக்கு வந்த மெத்தா "FULL MOON" என்ற பொய்ப் பெயரில் WATER திரைப்படத்தின் படப்பிடிப்பை மேற்கொண்டார். இந்து பக்தர்கள் இறந்தவர்களை கொண்டுசென்று எரிக்கும் இடம் (ghat) படிமேடை நிறைந்த சுற்றுச்சூழல் பொல்கொட ஆற்றின் கரையில் நிர்மாணிக்கப்பட்டது. கொழும்பு ஜிந்தும்பிட்டி பிரதேசத்தில் வீடொன்று விதவைகள் இல்லமாகவும் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வீடொன்று தனவந்தர் இல்லமாகவும் பயன்படுத்தப்பட்டது. 2005ல் WATER திரைப்படம் சந்தைக்கு வந்தது.

WATER பெண்கள் நிறைந்த ஒரு திரைப்படமாகும். குழந்தை மனைவி சுய்யா (Chuyya) எதிர்பாராத விதமாக விதவையாக்கப்படுகிறாள். அப்பெண்ணின் பெற்றோர் வழக்கத்திற்கு அமைவாக அவரை அழைத்துச்சென்று பவநகரில் உள்ள விதவைகள் ஆச்சிரமமொன்றில் கைவிடுகின்றனர். இறந்த பின்னர் இறுதிக்கிரிகைகளை மலிவாகச் செய்யும் எதிர்பார்ப்பினாலும் மற்றும் ஆற்றங்கரையில் இறுதிச்சடங்கு செய்வதால் மோட்சத்திற்கான வழி இலகுவாகத் திறக்கப்படுவதாலும் இந்து பக்தர்கள் தம் குடும்பங்களைச் சேர்ந்த விதவைகளைப் புனிதமான கங்கையான கங்கை ஆற்றின் கரையில் அமைந்துள்ள நகரங்களில் கைவிட்டுச் செல்கின்றனர்.

விதவைகள் சமூகத்தின் பல்வேறு பாத்திரங்கள் ஊடாக பொதுவான கவலைக்குரிய விதி மற்றும் ஒவ்வொருவரில் மாறுபட்ட தோற்றங்கள் சுபாவங்கள் எமது அவதானிப்புக்கு இலக்காகிறது. சுய்யா (Chuyya) சிறுபராயத்தவர் தனது விதி பற்றி அப்பெண்ணுக்கு தெளிவான புரிந்துணர்வு கிடையாது. ஆச்சிரமத்தை நிர்வகிக்கும் மதுமதி விதவைகளுக்கு அடைக்கலம் கொடுப்பதால் நன்மை அடைகிறார். ஏனையவர்கள் மதுமதியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அமைதியான வாழ்வு வாழ்கின்றனர். சுய்யா (Chuyya) வின் வருகை இப்பெண்களில் பாரிய சலனத்தை தோற்றுவிக்கிறது. தன்னுடைய விதிக்குத் தலைசாய்க்கும் பருவத்தைக்கூட எட்டாத சிறுமி எப்போதும் விதவைகளின் ஒரே தன்மையுள்ள வாழ்வுக்கு சவால் விடுக்கிறாள். அத்தருணம் வரையில் தனது விதியை பயபக்தியுடன் ஏற்றிருந்த இளவயது விதவை சகுந்தலா அச்சிறுமியின் அதிசயக் குணத்தின் முன் ஆச்சிரமத்தினுள் காணப்படும் அமைப்புக்கு சவால் விடத் தூண்டப்படுகிறாள். சுய்யா (Chuyya) வுக்கு அன்பு காட்டும் இரு பெண்களில் ஒருவர் ஏனையவர்களைப்போல் மொட்டை போட்ட வண்ணம் வெண்ணிற ஆடை உடுத்தி எப்பொழுதும் சமய அனுஷ்டானங்களில் ஈடுபடும் சகுந்தலா ஆவார். அடுத்தவர் கூந்தலுடைய நாய்க்குட்டியொன்றை செல்லப்பிராணியாக வளர்த்துவரும் கல்யாணி. மதுமதி கல்யாணியை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி கிடைக்கும் பணத்தைக்கொண்டு சீவியம் நடத்துகிறார். மதுமதி தீர்மானிக்கும் செல்வந்த வீடுகளுக்குச் செல்லும் கல்யாணி அதை தனது விதியாக ஏற்றுக்கொண்டுள்ளார். இவ்வாழ்க்கை முறைக்கு திடீரென நாராயணன் என்ற இளைஞனின் வருகை இடம்பெறுகிறது. இது 1938ல் நடைபெறுகிறது. இந்த இளைஞன் மகாத்மாவினுடைய சுதந்திரப்போராட்டத்தின் பங்காளி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் மற்றும் குல வலிமை நிறைந்த தனது வாழ்வைப் புறக்கணித்து அவர் கல்யாணியை மணந்துகொள்ள விரும்புகிறார். எனினும் ஆச்சிரமத்தின் அமைப்பும் வெளி பிராமணர்வாத தனவந்தர் அமைப்பும் இச்செயலை ஏற்கத்தயாரில்லை. மதுமதி கல்யாணி தன்னை விட்டுச் செல்ல இடமளிக்கவில்லை. இறுதியில் மதுமதியை புறக்கணித்த சகுந்தலா மதுமதியை விடுவிக்கிறார். எனினும் காலம் கடந்து விட்டது. சுய்யா (Chuyya) செல்வந்த அந்தணனின் பிடியில் அகப்பட்டு விடுகிறாள். தன்னைத் திருமணம் செய்துகொண்ட நாராயணனின் தந்தையினதும் குடும்பத்தின் ஆண் உறவினர்களதும் தீய செயல்களையும் காமத்தையும் அனுபவித்த கல்யாணிக்கு எதிர்காலம் இருள் சூழ்ந்துள்ளமை தெரிகிறது. கல்யாணி தற்கொலை செய்துகொள்கிறாள். இப்பயங்கர நடவடிக்கையினால் ஆச்சிரமம் நிலைதடுமாறுகிறது. சுய்யா (Chuyya) அப்பிடியிலிருந்து மீள்வதற்கு காந்தியடிகளினதும் நாராயணனினதும் சுதந்திரப் போராட்டம் வழி காட்டுகிறது.

WATER திரைப்படம் ஒப்பற்ற ஒரு படைப்பாகும். ஜயில்ஸ் நுட்கேன்ஸ் (Gils Nuttgens) அவர்களின் ஒளிப்பதிவு கதைக்கருவின் துன்ப மற்றும் கொடூரமான சுபாவங்களை ரம்மியமான காட்சிகள் சித்தரிக்க முயற்சிப்பதைக் காணமுடிகிறது. அதேபோல் திரைப்படத்தின் கட்டுக்கோப்பு "சாதாரண விதத்தில்" முதல் இடை கடை என கச்சிதமாக அமையப் பெற்றுள்ளது. நடந்த பல சம்பவங்கள் அவ்வாறு நடந்தே ஆக வேண்டும் என முன்கூட்டியே எம்மை கற்பனை செய்ய வைக்கிறது. லீசாரேயின் கல்யாணி பாத்திரமும் எப்ரஹாமின் நாராயணன் பாத்திரமும் மனோகரம் அவர்களின் அன்பும் அதன் மனோகரமும் பிரிவில் தங்கியுள்ளது. தலைவிதி போல் அவர்களின் பிரிவு அமைகிறது போன்றது. மெத்தா மிகவும் சிறப்பாகவும் மேலோட்டமாகவும் தன்னுடைய மரபுக்கதையை தொடக்கத்திலிருந்து இறுதிவரை சரளமாக படைப்பதற்காக ஒளிப்பதிவு ஒலியமைப்பு நடிப்பு சங்கீதம் இயக்கம் என்பவற்றை நெறிப்படுத்தியுள்ளார்.





ஒரு புறத்தில் விதவையாவதை
ஆதாரமாகக்கொண்டு தமது சமூக
உரிமை ஆக்கப்பட்டுள்ள
ஒரு தொகுதிப் பெண்கள்.
மறுபுறத்தில் அவர்கள் விதவைகள்
ஆச்சிரமத்திற்கும் அதனுள்
"வாழ்வின்போது சாவுக்கும்"
இறையாக்கும் சமூகமே
ஆணாதிக்க விழுமியங்களை
பேணிக் காத்த வண்ணம் மேலும்
ஒரு பகுதிப் பெண்களின் பாலியல்
உழைப்பைச் சுரண்டுகிறது.

WATER திரைப்படத்ினூடாக வெளிக்கொணரப்படும் அவலத்தை மிகவும் கச்சிதமாக ஒழுங்கமைப்பதில் மெத்தா வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதலாளித்துவம் மற்றும் குலவாத ஆட்சி அதிகாரங்கள், ஆணாதிக்க சிந்தனைவாத சமூகப் பாங்கினுள் பெண்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ள துன்பங்களை மெத்தா நன்கு அடையாளம் காண்கிறார். ஒரு புறத்தில் விதவையாவதை ஆதாரமாகக்கொண்டு தமது சமூக உரிமை ஆக்கப்பட்டுள்ள ஒரு தொகுதிப் பெண்கள். மறுபுறத்தில் அவர்கள் விதவைகள் ஆச்சிரமத்திற்கும் அதனுள் "வாழ்வின்போது சாவுக்கும்" இறையாக்கும் சமூகமே ஆணாதிக்க விழுமியங்களை பேணிக் காத்த வண்ணம் மேலும் ஒரு பகுதிப் பெண்களின் பாலியல் உழைப்பைச் சுரண்டுகிறது. இந்த தீமைகளும் நெருக்கடிகளும் WATER எனப்படும் திரைக்காவியத்தில் பொதிந்துள்ளமை மாத்திரமின்றி அவை மெத்தாவின் படைப்பாற்றலையும் பறைசாற்றி நிற்கின்றன. ■

விஸ்வப் பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 27 மகளிர் சுகாதார தினம்

ஒவ்வொரு ஆண்டிலும் மே மாதம் 27ஆம் திகதி உலகம் முழுவதிலுமுள்ள பெண்கள் மகளிர் சுகாதாரம் பற்றிய பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு மானுட வர்க்கத்தின் மேம்பாட்டிற்கும் பெண்களின் வளர்ச்சிக்கும் சுகாதாரம் எந்தளவு முக்கியத்துவம் வகிக்கிறது என்ற விடயம் குறித்து பொதுமக்களின் கவனத்தை அவதானித்து வருகின்றனர். 2006 ஆண்டு பெண்கள் எச்.ஐ.வி./எயிட்ஸ் தொற்றுக்கு ஆளாவதை கட்டுப்படுத்துவது குறித்த கவனம் செலுத்தப்பட்டது.

2006 அளவில் உலகம் முழுவதிலுமுள்ள பெண்களின் எண்ணிக்கையில் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றியுள்ள பெண்களின் எண்ணிக்கை 17.5 மில்லியனாகும். பொதுவாக ஆணாதிக்க சமூக பாங்கு காரணமாக பாலியல் சுதந்திரத்தையும் தெரிவையும் மிகச்சொற்ப அளவில் அனுபவிக்கும் பெண்கள் பாரியளவில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகியிருப்பதை நாம் எவ்வாறு விளங்கிக்கொள்ள முடியும்?

உயிரியல் விஞ்ஞான ரீதியில் நோக்கும்போது பாலியல் உறுப்புக்களின் அமைவு காரணமாக பெண்கள் அதிகமாக எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுக்கு இலக்காகின்றனர். ஏனென்றால் யோனி வழியில் அல்லது அதனை அண்மித்ததாக சிறியளவில் உராய்வு இருக்குமானால் அவ்வழியால் வைரஸ் உடலினுள்புக வாய்ப்புள்ளது. அதேபோன்று அநேகமான பெண்களுக்கு பாதுகாப்பான பாலியல் நடத்தையொன்றுக்கு பேரம்பேச அல்லது விண்ணபிக்க வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன. பெண்களின் அறியாமை எழுத்தறிவின்மை. சமூக வாழ்வில் பிரவேசிப்பதற்குள்ள தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகளால் தொற்றக்கூடிய நோய்கள் பற்றி அறிவதற்கு அல்லது அதற்கு தகுந்த சிகிச்சை திருமணம் அல்லது உறவிலும்கூட வன்முறையும் பலவந்தமும் இன்றி பாலியல் நடத்தையில் ஈடுபட உள்ள வாய்ப்புக்கள் ஆண்களைப்போன்று பெண்களுக்கும் குறைவாகவே உள்ளது. அதற்கான சந்தர்ப்பங்களும் குறைவாக உள்ளன.

அதேபோல். தமது குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு எச்.ஐ.வி/எயிட்ஸ் தொற்றும் சந்தர்ப்பத்தில் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு பெரும்பாலும் பெண்களே முன்வருகின்றனர். எச்.ஐ.வி/எயிட்ஸ் தொற்றின் காரணமாக தொழிலொன்றை செய்ய முடியாத நிலைக்கு ஆளாகும் கணவர்மாரின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களை பராமரித்தல் மற்றும் வழிநடத்தல் பொறுப்புக்களைச் சுமப்பவர்களும் பெண்களாகவே உள்ளனர்.

இந்தப் பொறுப்புக்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான வசதிகள். சமூக நலன்புரிச் சேவைகள் வழங்குவதில் பல அரசாங்கங்கள் தோல்விகளையே கண்டிருக்கின்றன. எச்.ஐ.வி/எயிட்ஸ் பற்றி சமூகத்தில் நிலவும் பிழையான கருத்துக்கள் காரணமாக பாரபட்ச கவனிப்புகளுக்கும் கொச்சைப்படுத்தலுக்கும் இலக்காகும் விதத்தை உணர்ந்தவர்கள் வைரஸ் பற்றியோ அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு நோய்கள் பற்றியோ பகிரங்கமாக கதைப்பதில் தயக்கம் காட்டுகின்றனர். இதன் காரணமாக அவர்களுக்குத் தேவையான மருந்துகள் சிகிச்சை அல்லது பாதுகாப்பு இல்லாமல் போய்விடுகிறது.


உலகமயமாக்கல் காரணமாக இன்று உலகத்தில் காணப்படும் மருந்து உற்பத்தி கம்பனிகளின் ஏகாதிபத்தியத்தினால் வறிய மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குத் தேவையான எச் ஐ வி / எயிட்ஸ்க்கான சிகிச்சையை பெறமுடியாதுள்ளது. புலமைச் சொத்துரிமையை நிர்வகிக்கும் சட்ட ஒழுங்குகளை பயன்படுத்தி எச் ஐ வி உடலினுள் புகும் சுகாதார பிரதிகூலங்களை தற்காலிகமாகவேனும் கட்டுப்படுத்தக்கூடிய மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் தனி உரிமையை வென்றெடுத்துள்ள பல்தேசிய கம்பனிகள் சிலவே. 2005 ஆண்டிறுதியில் எச் ஐ வி கட்டுப்பாட்டிற்காக (குணப்படுத்தலுக்கு அல்ல) பயன்படுத்தும் Anti Retro – Viral (ARV) மருந்து தேவையாகவுள்ள சுமார் 4 மில்லியன் மக்களுக்கு அது கிடைக்கவில்லை என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

2007 ஆண்டில் இலங்கையில் ஆசிய – பசுபிக் பிராந்திய எச் ஐ வி / எயிட்ஸ் பற்றிய கூட்டமொன்று நடைபெறவுள்ளது. அதில் பெண்கள் மற்றும் எச் ஐ வி / எயிட்ஸ் தொடர்பான விசேட பிரச்சனைகள் சிக்கல்கள் குறித்து கவனத்திற்கொள்ள வேண்டுமாயின் நாம் தற்போதிருந்தே அப்பிரச்சனைகள் மற்றும் சிக்கல்கள் குறித்து பொது மக்களின் கவனத்தை திருப்பும் பணிகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. ■

சுனிலா அபேசேக்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது உடல்

## ஆண் பெண் அசமத்துவத்தால் பாதிப்புக்குள்ளாகும்

# பாலியல் வாழ்வு

மனிதனின் அடிப்படை உணர்வுகளில் ஒன்றான பாலியல் உணர்வு சமூகத்தில் நிலவுகின்ற சமமற்ற ஆண்-பெண் பால் நிலையால் வேறுபட்டு நிற்கிறது. அதாவது ஆணும் பெண்ணும் பாலியல் பற்றிய புரிதலை மிக வேறுபட்ட கருத்தாக்கங்களினூடகவே புரிந்துகொள்கின்றனர். இதனால் பாலியல் தன்மைக்கும் (Sexuality) பால் நிலைத் தன்மைக்கும் (Gender) இருக்கக் கூடிய உறவு நிலை ஆண்பெண் பாலியல் வாழ்விலும் மறு உற்பத்தி ஆரோக்கியத்திலும் தாக்கம் செலுத்துகிறது.

பெண்களுக் கெதிரான வன்முறைகளும், வீட்டு வன்முறைகளும் அதிகளவில் எச்.ஐ.வி. தொற்றுக்கு பெண்கள் உள்ளாவதும் மற்றும் குழந்தைகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதும் கூட ஆண்-பெண்ணுக்கிடையில் இருக்கும் பாலியல் பற்றிய புரிதலாலும் வாழ்க்கை முறையாலும் ஏற்பட்டதே.

இலங்கை போன்ற கீழைத்தேய, வளர்முக நாடுகளில் பாலியல் வாழ்வு பெண்களுக்கு பெரும் சவாலாகத்தான் இருக்கிறது.

மதங்களாலும், மரபு சார்ந்த வாழ்க்கை முறையாலும் கட்டியெழுப்பப்பட்ட மக்கள் குளுமங்கள் வாழ்கின்ற இலங்கையில் ஆணாதிக்க தன்மைகள் பெண்களின் பாலியலில்தான் மையம் கொள்கின்றன.

பொதுவாகவே தந்தை வழிச் சமூகம் பெண்களின் பாலியலை அடக்குவதன் மூலமே தம்மை நிலைநிறுத்திக் கொண்டன. தமக்கான வாரிசை உறுதிப்படுத்த பெண்களின் பாலியலை கட்டுப்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு உருவானது. இது உலகின் மனிதகுல வரலாறு. மதங்களாலும் மரபார்ந்த வாழ்க்கை முறைகளாலும் கட்டுப்பட்டிருக்கும் இலங்கை மக்களின் வாழ்க்கை முறையில் பலம் பொருந்திய ஆணாதிக்கம் இருக்கிறது. பெண்ணின் மீதான ஆணின் அதிகாரம், மேலாதிக்க கருத்துருவாக்கம் புனைவுகளால் கட்டியெழுப்பப்படும் போது அங்கு பாலியில் முக்கிய இடம் வகிப்பதை காணமுடிகின்றது.

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள் என பல்லின மத கலை கலாசாரங்களைக் கொண்டவர்கள் வாழ்கின்றனர். தந்தை வழிச் சமூக மரபில் மதங்களின் தாக்கமும் ஆண்-பெண் பாலியல் வாழ்வை தீர்மானிக்கின்றது. அந்த வகையில் மிகுந்த ஏற்றத்தாழ்வுடனான ஆண்-பெண் பாலியல் வாழ்வை இலங்கையில் இனம் காண முடிகிறது.

பொதுவாக இலங்கை தமிழர்கள் இந்திய திரைப்பட கலாசாரத்தில் உளவியல் ரீதியாக தம்மை இணைத்துக்கொண்டவர்கள். இதனால் தான் அனேகமான பெண்கள் தமக்கான பாலியல் வாழ்வு ஒன்று இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வதே இல்லை. தன்னை ஒரு ஆணுக்கு கொடுத்தல் முறையில் "என்னையே உனக்குத் தந்தேன்' என்று தான் கூறுகிறார்கள். தன் உடல் பற்றிய புரிதல் மிக அரிதாகவே பெண்களுக்கு இருக்கிறது. முகத்தை அழகுபடுத்துவதில் உடலுக்கு ஆடை அணிவதில் இருக்கும் ஆர்வம் உடல் பற்றிய புரிதலில் இல்லை. தன் உடலை தானே கட்டுப்படுத்த முடியாத பரிதாப வாழ்வை அதிகமாக மூவின (தமிழ், சிங்கள,முஸ்லிம்) பெண்களும் கொண்டுள்ளனர்.

பால்வினைத் தொழிலாளர்கள் கூட தம் உடலை விற்கின்ற நிலையிலும் அவர்களது கட்டுப்பாட்டில் அவர்களது உடல் இல்லை. அங்கே பெரும் சுரண்டல்களுக்கு அவர்கள் ஆளாகின்றனர். இதேநேரம், பெண்கள் தம் உடலை அசூசையாக பார்க்கின்ற மரபு உள்ளார்த்தமாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது (தீட்டு,பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்ட நிலைமையில் இவ்வெண்ணங்கள் மேலோங்கியிருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படையாக அவதானிக்கமுடியம்). மறுபுறம் கிழைத்தேயங்களில் அவளது உடலை ஆள்வதற்கு இன்னொருவன் உள்ளான் என்ற நிலை வளர்க்கப்படுகிறது.

"கணவன் மட்டும் காணும் அழகை கடையில் போட்டு காட்டுறியே' என்ற சினிமா பாடல் முதல் "கோரிக்கை அற்று கிடக்கு வேரில் பழுத்த பலா' என்று விதவைகளைப் பார்த்துச் சொன்ன பாரதிதாசன் வரை பெண்ணின் பாலியல் தன்மை யாரோ ஒருவருக்கானது என்ற கருத்தையே கொண்டது.

இதற்கு சமமற்ற அல்லது முற்றாக வேறுபட்ட நிலைமைகளினூடாக ஆண் பெண் பாலியல் வாழ்வு கட்டமைக்கப்படுகின்றமையே காரணம்.இதன்போது ஒருவருக்கொருவர் கௌரவமான முறையிலோ ஒருவருக்கொருவர் விளங்கிக் கொள்ளும் முறையிலோ பாலியல் வாழ்வை மேற்கொள்வதோ, தரமான ஆரோக்கியமான பாலியல் வாழ்வையும் மறு உற்பத்தி உரிமையையும் பெறுவதோ சாத்தியமற்றது.

இனங்கள் தம் தனித்தன்மையை பேணுகின்ற போது அங்கே பெண்கள் தான் கலாசார காவிகளாகவும், குறியீடுகளாகவும் உள்ளனர். எனவே பெண்கள் கட்டமைக்கப் பட்டிருக்கும் முறைமை முக்கியமானது.

இலங்கையில் தரமான பாலியல் வாழ்வுக்கு ஆரோக்கியமான மறு உற்பத்திக்கும் பாலியல் கல்வி சாத்தியமானது என்பதை புரிந்து கொள்ள முடிந்தாலும் அதை பாடசாலையில் தொடங்க முடியுமா? எந்த வயதில் தொடங்குவது? பெற்றோர் கதைக்கலாமா? மத சம்பரதாயங்களுக்கு இது ஏற்றதா? போன்ற பல்வேறு கேள்விகள் முன்னெழுகின்றன. இவற்றுக்கான விடைகளை மூவின மக்களும் இணைந்தே இனம் காணவேண்டும்.

அது சாத்தியமா? இனங்கள் தம் தனித்தன்மையை பேணுகின்ற போது அங்கே பெண்கள் தான் கலாசார காவிகளாகவும், குறியீடுகளாகவும் உள்ளனர். எனவே பெண்கள் கட்டமைக்கப்பட்டிருக்கும் முறைமை முக்கியமானது. அந்த முறைமைகளில் மாற்றத்தை எந்த இனமும் விரும்புவதாக இல்லை. இந்த நேரத்தில் இலங்கையில் எந்தளவிற்கு ஆண் பெண் சமத்துவ பாலியல் வாழ்வுக்கு அமைப்புகள் நிறுவனங்கள் உதவ முடியும் என்று பார்க்கலாம். அனேகமாக திருமணமான தம்பதியினரிடையே தான் இதுபற்றி கதைக்கப்படுகிறது. அதுகூட மறு உற்பத்தியில் (குழந்தை பேற்றில்) ஏற்படுகின்ற பிரச்சினைகளின் போது தான் இதுபற்றி கதைப்பதற்கு தம்பதியினர் முன்வருகின்றனர்.

அதற்கு முன்னான காலப்பகுதி, திருமணத்திற்கு முன்னான பருவ வயது என்பன முக்கியமானவை. இலங்கையில் 30 வயதிற்கு இடைப்பட்டவர்களிடையே எடுக்கப்பட்ட ஒரு ஆய்வில் 75% ஆனவர்கள் தாம் பாலியலை நண்பர்கள், படங்கள் மூலம் அறிந்ததாகத்தான் கூறினர். இது எந்தளவிற்கு ஒரு தரமான பாலியல் அறிவை அவர்களுக்கு வழங்கியிருக்கும்?இன்று (2006) இலங்கையில் 5 மில்லியனுக்கும் அதிகமான 15-24 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்கள் எச் ஐ வி தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

குருடன் குருடனுக்கு வழிகாட்டியது போல் தான் பாலியல் அறிவைப் பெறுகின்றனர்.இதேநேரம் பெண்களைப் பொறுத்தளவில் நகர்ப்புற பெண்களை விட கிராமப்புற பெண்கள் மிக குறைந்தளவு பாலியல் அறிவையும் அதேநேரம் மிக குறைந்த வயதில் பாலியல் அனுபவத்தையும் பெறும் வாய்ப்பு இருக்கிறது.

கிராமத்தில் இளவயது திருமணம் மூவின மக்களிடமும் உண்டு. அத்துடன் கிட்டிய உறவினர்கள் மூலம் சிறுவயதில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் அவலங்களும் உண்டு.இது ஆண் பெண் இருவருக்குமே நடந்தேறுகின்றன.

பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சமான பாகுபாட்டு வடிவங்களை அகற்றும் பொருட்டு உருவான ஒப்பந்த உடன்படிக்கை "சீடோ (CEDAW) அதில் உறுப்புரை 10 இல் உடல் நலம் குறித்துக் கற்கவும், பாலியல் கல்வி பெறவும் உரிமை உள்ளது என்று கூறப்படுகிறது. அதை அரசு எந்தளவிற்கு நடை முறைப்படுத்துகிறது? சமூகம் எந்தளவிற் ஏற்றுக் கொள்கிறது.? என்பன கேள்விகளாகத்தான் உள்ளன.

இலங்கை குடும்பத்திட்டச்சங்கம் இளவயதினரிடையே "பாலியலும் மறு உற்பத்தி ஆரோக்கியமும்' தொடர்பாக கருத்தரங்குகளை வைத்தாலும் மிக குறைந்தளவிலானவர்களே இதில் பங்கு கொள்வது தெரியவருகிறது. இதற்குக் காரணம் "பாலியல்' பற்றி நமது சமூகம் கொண்டிருக்கக்கூடிய எண்ணப்பாங்குகளாகும்.

2001 இல் இருந்து 2003 வரையான காலப்பகுதியில் இலங்கை குடும்பத்திட்டச்சங்கம் நடத்திய "பாலியலும் மறு உற்பத்திக்கான ஆரோக்கியமும் " பற்றிய கருத்தரங்குகளில் ஆறு பாடசாலைகளில் "ஹெல்த் கிளப்' அமைக்கப்பட்டமையும், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்வோருக்காக நடத்தப்பட்ட கருத்தரங்குகளும் குறிப்பிடத்தக்கன. ஆனாலும் இவை போதியதாக இல்லை.

திருமணத்திற்கு முன் தம்பிள்ளைகளுக்கு பாலியலும் மறு உற்பத்தி ஆரோக்கியமும் தொடர்பான அறிவை, தகவலை வழங்க பல பெற்றோர் சம்மதிப்பதில்லை. ஆண் பெண் சமத்துவமற்ற இந்த சமூகத்தில் பாலியல் சார்ந்தே பெண்ணை கட்டுப்படுத்துகின்ற இந்த சமூகத்தில், பாலியல் பற்றியும் மறு உற்பத்தி பற்றியும் தெளிவான அறிவு இருவருக்கும் கொடுக்கப்பட வேண்டும். அதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் இந்த அறிவை பெறுவதில் பாரபட்சம் உண்டு. அதாவது

மறு உற்பத்தியா? ..............பெண்களுக்கு "ஓக்கே"

பாலியல்?.............. வேண்டாம்

ஆண்களுக்கு பாலியல்?.............. "ஓக்கே"

மறு உற்பத்தி? ......................அவசியம் இல்லை

இந்த நிலைதான் இருக்கிறது இலங்கை மக்களின் மனப்பாங்கில். இது மதகலாசார கட்டமைப்பாலும் அதனால் ஏற்பட்டிருக்கும் ஆண் பெண் சமத்துவமின்மையாலும் ஏற்பட்டது. இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

பாலியல் பற்றி நண்பர்கள் மூலமும், படங்கள் மூலமும் அறிந்து கொள்ளும் பெரும்பாலானோர் கருத்தடை பற்றி எதுவும் அறியாதவர்களாகவே உள்ளனர். இதனால் பாதிக்கப்படுவது யார்? மீண்டும் பெண்கள்தான், வேண்டாத கர்ப்பம் கருக்கலைப்பு. இலங்கையில் கருக்கலைப்பு தடை செய்யப்பட்டது. இந்த நிலையில் சட்ட விரோத கருக்கலைப்புகள் பெண்களின் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. சில வேளைகளில் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கையில் சட்ட விரோதமாக கருக்கலைப்பில் ஈடுபடுபவர்களில் அனேகர் திருமணமான பெண்கள் தான் என்று தகவல்கள் கூறுகின்றன.அதேநேரம் இன்று(2006) 324 குடும்ப பெண்கள் எச் ஐ வி தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என தேசிய எயிட்ஸ் தடுப்பு நிலைய பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.ஏன் இந்த நிலை? இந்த இடத்தில் மறு உற்பத்தி சார்ந்த ஆரோக்கியத்தில் ஆணின் பங்கு என்ன? ஒரு கணவனின், தந்தையின் பங்கு என்ன? குடும்ப அலகிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இலங்கை போன்ற நாடுகளில் ஆண் பெண் இருவருக்குமான பங்காற்றல் குடும்பம் சார்ந்து கணிப்புப் பெறுவதில்லை (பெண்களுக்கு மட்டும் குடும்பம் சார்ந்தது, ஆண்களுக்கு சமூகம் சார்ந்தது)

இதனால், இப்படி மதங்கள் கலாசாரங்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் ஆண் பெண் அசமத்துவநிலை மிக பெரிய இடைவெளியைக் கொண்டது.




இந்த சமத்துவமற்ற பால் நிலைத் தன்மையானது (un balance Gender) பாலியலிலும், (Sexuality) தாக்கம் செலுத்த பெண்ணுக்கு பாலியல் வாழ்வு ஒரு பெரும் சவாலாகிறது.அல்லது பிரச்சனைக்குரியதொன்றாகிறது. இந்த சவாலை எதிர்கொள்ள ஆண் பெண் இருவருக்குமான பாலியல் கல்வியும், மறு உற்பத்தி சார்ந்து ஆண்களுக்கும் போதியளவு அறிவூட்டலும் அவசியம்.

இதேநேரம், எச்.ஐ.வி. தொற்றுக்கும் பெண்களே அதிகளவில் ஆளாகின்றனர் என்பதற்கு பெண்களின் உடல் அமைப்பை ஒரு காரணமாகக் கூறினாலும், சமூகத்தில் பெண்ணின் நிலை, தரம் என்பனவும் இதில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது பாலியல் தொழில் செய்யும் நிலைமை, கணவனின் பாலியல் விருப்பை நிராகரிக்க முடியாமை, பாலியல் வல்லுறவுக்கு இலகுவாக உட்படுதல் போன்றன பெண்களின் பாலியல் வாழ்வை அச்சத்திற்குள்ளாக்குகின்றன.

பாலியல் சார்ந்த மொழியைக் கூட பெண் பயன்படுத்த முடியாத கொடுமை தமிழ் சமூகத்தில் உண்டு.

அண்மைக்காலத்தில் இந்தியாவில் "பெண் மொழி' சார்ந்த பிரச்சினை இத்தகையதே. அதாவது பெண்ணுடல் சார்ந்து பெண்களால் எழுதப்பட்ட கவிதைகளுக்கு தமிழகத்தில் பெரும் எதிர்ப்பு கிளம்பியது. அப்படி பாடிய பெண்களை மிகவும் கீழ்த்தரமாக விமர்சிக்கும் இலக்கிய ஜாம்பவான்களையும் காண முடிந்தது. பெண்களின் பாலியலை வைத்தே பிழைப்பு நடத்திய ஆண் இலக்கியவாதிகளுக்கு பெண்களின் பாலியல் வலிகள் கொடுமைகள் பெண்களால் எடுத்துக் கூறப்பட்ட போது சகிக்க முடியாது போனது. அண்மைக் காலத்தில் "குஷ்பு' என்ற நடிகை பெண்களின் பாலியல் தன்மை பற்றி கூறிய கருத்துக்கு கிளப்பப்பட்ட பெரும் சர்ச்சையும் கவனத்தில் எடுக்கத்தக்கது. மிகப்பெரும் அரசியல் வட்டாரங்களில் சர்ச்சை கிளம்ப தமிழ் கலாசாரம் இம்சிக்கப்பட்டதாக தமிழ் பெண்கள் மானம் பறிக்கப்பட்டதாக கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இப்படி பெண்கள், பெண்களின் பாலியல் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தினால் அதை கலாசார புடம் போட்டு அடித்து வீழ்த்துவதும், சம்பந்தப்பட்ட பெண்களை பாலியல் ரீதியாகவே தாக்குவதும், பெண்கள் பாலியலை அறிந்து கொள்வதை திட்டமிட்டு தடுக்கிறது.

சமூக ஒழுங்கு என்பது பெண் உடலுக்கு போடப்படும் பூட்டு மட்டும்தான் என்று நினைத்துக் கொண்டு இயங்கும் ஆண்மைய கருத்துருவாக்கங்கள் ஒரு சமத்துவமான கௌரவமான ஆண் பெண் உறவு நிலையில் உடைபட வேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் மனித பாலியல் பற்றியும், மறு உற்பத்தி பற்றியும் தெளிவான அறிவு கொடுக்கப்பட வேண்டும். இது மனித உரிமை சம்பந்தப்பட்டது. மத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரங்களுக்குள் கட்டுப்பட்டு பாரபட்சமாக இந்த அறிவு கிடைக்குமாயின் அதில் பாதிக்கப்படுவது பெண்தான்.

சந்தோஷமான பாலியல் வாழ்வையும், தரமான மறு உற்பத்தி ஆரோக்கியத்தையும் ஒவ்வொரு நபரும் பெறுவதை அரசும் அரசசாரா நிறுவனங்களும் உறுதிப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் மத நிறுவனங்கள் கூட, இதை உறுதிப்படுத்த வேண்டும். இன்றைய காலத்தில் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ள பெண்கள் மறு உற்பத்தியிலும் திட்டமிட வேண்டிய தேவை உள்ளது. எத்தனை குழந்தைகள் வேண்டும், எப்போது வேண்டும் போன்றவற்றை சிந்திக்கும் ஆற்றலும் வலுவும் அறிவும் இருவருக்குமே வேண்டும்.

குடும்பக்கட்டுப்பாடு செய்வது பாவமான விடயம் என்று மதங்கள் சில நம்புகின்ற நிலையில் பாதிக்கப்படுவது பெண்களின் ஆரோக்கியம். இந்த நிலையில் சில மத நிறுவனங்கள் குறிப்பாக கிறிஸ்துவ மத நிறுவனம் திருமணம் முடிக்கப் போகும் தம்பதியினருக்கு வழங்கும் பாலியல், மறு உற்பத்தி தொடர்பான அறிவு வரவேற்கத்தக்கதே. ஆனாலும், போதியதாக இல்லை.

பாலியல் வாழ்வில் திருப்தியைக் “கொடுப்பதும்’ மறு உற்பத்தியில் குழந்தை பெற்றுக் “கொடுப்பதும்’ பெண்களாக இருந்தால் ஒரு முழுமையான கௌரவமான பாலியல் வாழ்வையும், மறு உற்பத்தி ஆரோக்கியத்தையும் ஒரு குடும்பம் கொண்டிருக்க முடியாது. ஒருவருக்கொருவர் கௌரவம் கொடுத்து பரிமாறிக் கொள்கின்ற வாழ்க்கையைப் பெறுவதற்கு பால் நிலை சமத்துவமான பாலியல் கல்வி அவசியம். இலங்கையைப் பொறுத்தவரை கல்வி அறிவு வீதம் அதிகம். பெண்கள் கல்வி கற்பதும் அதிகம், சுகாதார வசதிகளும் சிறப்பாக உள்ளன. எனவே, குடும்ப வாழ்வு தரமானது என்ற முடிவே உள்ளது. அதிலும் குழந்தைகள் இறப்பு வீதம் குறைவடைந்துள்ளது. குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்துள்ளது. எனவே, தரமான வாழ்வு இலங்கையில் உள்ளது என்ற முடிவுக்கு பலர் வரலாம்.

ஆனால், மறுபக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற வீட்டு வன்முறைகள், வெளியில் உள்ள பெண்களுக்கெதிரான வன்முறைகள், சிறுவர்கள் பெண்கள் கடத்தப்படல், கருக்கலைப்பு, பாலியல் துஷ்பிரயோகம் எச்.ஐ.வி. தொற்று, பாலியல் தொழில் என்பன எதனுடைய மறுபக்கங்கள்? அந்த “தரமான” வாழ்வின் மறுபக்கங்கள். இவை வெளிப்படுத்துவது என்ன? ஆண் பெண் பால்நிலையில் பாலியல் சமத்துவம் இன்மையை. இவற்றை செய்வது அல்லது செய்யத் தூண்டுவது யார்? இவற்றால் பாதிப்பிற்குள்ளாவது யார்? பெரும்பாலும் பாதிக்கப்படுவது பெண்கள்தான்.

அப்போ குடும்ப அலகில் முக்கியமான இருவரில் ஒருவர் பாதிப்பற்குள்ளாகும் போது அது “தரமான வாழ்வு’ என்று கூறலாமா? இல்லை.

குறைந்தபட்சம் ஒவ்வொரு தனி நபரும் தனக்குரிய வாழ்க்கை துணையுடன் கௌரவமான ஆரோக்கியமான பாலியல் வாழ்வையும், மறு உற்பத்தி அறிவையும் கொண்டு இயங்க வேண்டும். ஒவ்வொருவரினதும் உணர்வை மதித்து, புரிந்து, அறிந்து செயற்படுதல் வளமான வாழ்வுக்கு வழியாகும். ■

எம். தேவகௌரி

# நிருவாணம்



சாம் வெறி கொண்டு
பெண்ணை அனுபவிக்க
களியாட்ட விடுதியில்
மின் கம்பத்தின் கீழ்
குறி வைக்கும்
கட்டாக்காலிகள்


சூரியோதயத்தில்
மனைவி பிள்ளைகள் சூழ
சமூதாய பற்றுள்ளவராக
பொது தளத்தில் மிளிர்ந்து
..........
சமயம் கலாசாரம் விழுமியம்
பற்றி போதனைகள் செய்தாலும்

மறந்துவிட வேண்டாம்
ஒரு போதும்
மின் கம்பத்தின் கீழ்
களியாட்ட விடுதியில்
கட்டாக்காலிகள்
நீங்கள்

தமயந்தி முத்துகுமாரகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகச் சுதந்திரம் அனுஷ்டிப்பு

ஆண்டுதோறும் ஊடகவியலாளர்கள் மே மாதம் 03ஆம் திகதியை ஊடக சுதந்திர தினமாக கொண்டாடி வருகின்றனர். 2006 ஆண்டு இத்தினத்தைக் கொண்டாடுவதற்காக இலங்கையின் ஊடகவியலாளர்களினதும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களின் முன்னோடிகளினதும் பங்கேற்புடன் பகிரங்க ஒன்றுகூடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதேபோல் கோட்டைப்புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் ஆர்ப்பாட்டமொன்றும் நடத்தப்பட்டது. அதே தினத்தில் இவ்வாறு முழு உலகத்திலும் ஊடக சுதந்திரம் கொண்டாடப்பட்ட அத்தருணத்தில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் ஊடக சுதந்திரத்திற்கு பாரியளவில் களங்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதை அறிய முடிந்தது.

இதன் முதலாவது சம்பவமாக யாழ்ப்பாணத்தில் பிரசுரிக்கப்படும் பிராந்திய தமிழ் பத்திரிகையான "உதயன்" பத்திரிகையின் அலுவலகம் தாக்கப்பட்டு அங்கிருந்த விநியோக முகாமையாளர் திரு சுரேஷ் மற்றும் அவரது உதவியாளர் திரு ரஞ்சித்குமார் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டனர். "உதயன்" பத்திரிகை அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்த ஆயுதபாணிகள் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது மாத்திரமன்றி பொருட்களுக்கும் சேதம் விளைவித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மரணித்த இருவரை தவிர மேலும் சிலர் காயங்களுக்கு உள்ளானார்கள். இனப்பிரச்சனை தீவிரம் கண்டுவரும் இவ்வாறான காலகட்டத்தில், வடக்கில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றியம் அங்கு வாழும் மக்களின் கருத்துக்கள் பற்றியும் தெற்கில் வாழும் மக்களுக்கு கருத்தறிய இடமளித்த "உதயன்" போன்ற பத்திரிகையின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்துவதன் மூலம் அதன் குரலை நசுக்குவதற்கு தாக்குதல் நடத்திய அடையாளம் காணப்படாத துப்பாக்கிதாரிகள் முனைந்துள்ளதாக சந்தேகமின்றி புலனாகின்றது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய மனித படுகொலைகள் போன்ற இதுவும் கைவிடப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் சந்தேகமும் எம்முள் நிலவுகிறது.

மே 03ஆம் திகதி ஊடக நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகளில் கலந்துகொள்ளவென பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திற்கு வருகை தந்த பெண் ஊடகவியலாளர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டமை இரண்டாவது சம்பவமாகும். செல்வி சிவரம்மியா விசாநந்தன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின நிவாரண ஒலிபரப்பாளராவார். பயங்கரவாத செயல்களை தடுப்பதற்காக அவர் சில தினங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரின் கைது தினமும் நாடு பூராகவும் கைதுசெய்யப்படும் தமிழ் மக்களின் தலைவிதியை அடையாளமிடுகிறது.

நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை மற்றும் நாளுக்குநாள் உக்கிரமடைந்து செல்லும் பிரகடனப்படுத்தப்பட்ட இன மோதல்கள் காரணமாக ஊடகச் சுதந்திரம் மட்டுமின்றி சாதாரண சனநாயகமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தில் பெண்களின் ஊடகப்பத்திரம் குறித்து ஆர்வம் காட்டும் எமக்கு சந்தோசத்திற்குரிய ஒரு விடயம் இருக்கிறது. அதாவது 2006 ஆண்டில் ஆசிரியர் குழாம் மற்றும் இலங்கை இதழியல் கல்லூரியினால் வழங்கப்படும் பல விருதுகளை இலங்கைப் பெண் ஊடகவியலாளர்கள் வென்றெடுத்துள்ளனர் என்பதாகும். "சண்டே லீடர்" பத்திரிகை ஆசிரியர் சொனாலி சமரசிங்ஹ அவர்களுக்கு ஆண்டில் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்காக வழங்கப்படும் மர்வின் டி சில்வா விருது கிடைத்துள்ளமை விசேட அம்சமாகும். அதேபோல் ஆண்டின் மிகச்சிறந்த இளைய ஊடகவியலாளராக "டேலி மிரர்" பத்திரிகையின் தர்ஷா பஸ்ரியன் சிறந்த பாராட்டைப்பெற்ற ஊடகவியலாளராகவும் "த அயிலன்ட்" பத்திரிகையின் நாமினி விஜேதாச ஆகியோரும் விருதுகளை வென்றனர். "சண்டே லீடர்" பத்திரிகையின் செய்தி ஆசிரியர் மந்தனா இஸ்மயில் அபேவிக்கிரம சிறந்த வணிக ஊடகவியலாளராகவும் அதே பத்திரிகையின் ஆய்வுப் பிரிவின் ஆசிரியர் தில்ருக்ஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹந்துன்நெத்தி ஆண்டின் சிறந்த ஆங்கில மொழி ஊடகவியலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். வீரகேசரி நாளிதழின் கிறிஷ்னி இபொம் சிறந்த தமிழ் ஊடகவியலாளருக்கான விருதை தனதாக்கிக்கொண்டார்.

தற்போது மாலைதீவில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் "மினிவன்" செய்தி ஆசிரியர் லெனிபர்லத்தீப் மற்றும் "சந்தானு" எனப்படும் இலத்திரனியல் சஞ்சிகையில் பணியாற்றிய பத்திமத் தீஸ்ரீன் ஆகியோரின் ஆளுமைக்கும் வலிமைக்கும் பாராட்டு தெரிவிப்பதற்கும் இதனை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டோம். அதேபோன்று சமீபத்தில் லெபனான் மீது இஸ்ரேல் அரசாங்கத்தின் தாக்குதல்களை அறிக்கையிட்டுக் கொண்டிருந்தபோது மரணமான 23 வயதான லயால் நகீப் அவர்களின் வீரச் செயலையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து பெண் ஊடகவியலாளர்களும் அறிந்தோ அறியாமலோ ஆணாதிக்கம் ஆட்சிசெய்யும் துறையொன்றில் பெரும்பாலும் தனித்து நின்று போராடுபவர்களாக இருக்கின்றார்கள். சமூகத்தில் நிலவும் பால்நிலை அபிப்பிராயங்கள் காரணமாக பத்திரிகைக் கலையும் ஊடகத்துறையும் பெண்களுக்கு பொருந்துவதில்லை என்பது பற்றி பிழையான கருத்து நிலவுகிறது. சிறந்த ஊடகவியலாளராவதற்கு தனக்குத் தேவையான தகவல்களையும் தரவுகளையும் பெறுவதற்காக எந்தநேரத்திலும் எந்த இடத்திற்கும் செல்ல தயார் நிலையில் இருக்க வேண்டும். எச்சரிக்கைகளையும் அதிகாரங்களையும் அச்சமின்றி எதிர்கொள்ள வேண்டும். ஆண் ஊடகவியலாளர்கள் சஞ்சரிக்கும் உலகத்தினுள் புகுந்து அவர்களுக்குச் சமமாக அனைத்து சூழமைவுகளையும் எதிர்கொள்ள வேண்டும். ஊடகத்துறையில் பிரவேசிக்கும் பெண்கள் சமையற்கலை, பிள்ளைகளை பராமரித்தல், வீட்டு அலங்காரம் மற்றும் அழகுக்கலை என்பவற்றையே தெரிவுசெய்கின்றார்கள். அந்த தடைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அப்பால் சென்று அரசியல், நல்லாட்சி, யுத்தம் ஆகிய துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஊடகத்துறையில் வரவேற்பை வென்றெடுப்பதில் வெற்றிகாணும் அனைத்து பெண்களுக்கும் எங்கள் பாராட்டுக்கள். ■

சுனிலா அபேசேக்கர

# லெபனான் போர்முனையில் அரேபிய பெண் செய்தியாளர்

துபாயிலிருந்து அலி பாலி

தொஹாவில் அல் ஜசீரா தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிக்கும் ஆணொருவர் எந்தவொரு அசைவுமின்றி செய்தி வாசிக்கும் அதேநேரத்தில் முழுமையாக போர்க்கள ஆடைகள் தரித்த பெண் செய்தியாளர்கள் இருவர் லெபனான் ஈஸ்ராயில் போர் முனையில் இரண்டு பக்கங்களிலிருந்தும் நேரடியாக அறிக்கையிடுகின்றனர்.

இது அரேபியர்களுக்கு யுத்தத்தை அறிக்கையிடும் புதியதொரு தோற்றமாகும். இவ்விரு இளம் செய்தியாளர்களும் தங்களின் தலைக்கு மேல் வானத்தில் வட்டமிடும் போர் விமானங்களுக்கு இலக்காகும் ஆபத்தையும் பொருட்படுத்தாது போர் வலயத்தில் முன்செல்லலானது அவர்களுடைய ஆண் சகாக்களை தோற்கடித்துள்ளது.

ஈராக்கியப் பெண்களை உள்ளடக்கிய அரேபிய பெண் செய்தியாளர்கள் வன்முறைகள் நிறைந்த ஈராக்கிலிருந்து அரேபிய தொலைக்காட்சி நிலையங்களுக்கு செய்திகளை அறிக்கையிட அதிகளவில் முன்வருகின்றனர். அதில் சிலருக்கு மரணங்களும் சம்பவித்துள்ளன.

ஹிஸ்புல்லா ஈஸ்ராயல் மோதல்கள் ஆரம்பித்த திகதியிலிருந்து அதிகளவான பெண் செய்தியாளர்கள் அறிக்கையிடவில் இணைந்துகொண்டதோடு லெபனான் நாட்டவரும் சுதந்திரப் படப்பிடிப்பாளருமான பெண்ணொருவர் வெகுநாட்களுக்குள்ளேயே மரணமானார். லயால் நகீப் 23, தென் லெபனானில் பயனித்துக் கொண்டிருக்கும்போது வாடகை வாகனத்திற்கருகில் விழுந்து வெடித்த ஏவுகணை அவரை பழிகொண்டது.

"நான் சாதாரணமாக பணியாற்றுவது தொஹா அலுவலகத்தின் செய்திப் பிரிவாக இருந்தாலும் தென் லெபனானுக்குச்செல்ல சுயவிருப்பத்துடன் முன்வந்தேன். வெகு நாட்களாகும் முன்னரே அரேபியர்களிடையே பழக்கப்பட்டவர் போல் ஆன கட்டியா நசரின் கருத்து இது.



முகாமைத்துவம் எனது முன்னோக்கிய பயணத்தை தடுக்கவில்லை. எனது முடிவை பாராட்டினார்கள் கட்டியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீருட்டின் அல்ஜசிரா அலுவலகத்திலிருந்து தெரிவித்தார்.

ஆண்களை பிரதானமாகக் கொண்ட பழமைவாத சாயல் காணப்படும் மத்திய கிழக்கு மக்களிடையே சாதாரணமாக பெண்கள் ஒடுங்கிக் கிடந்தாலும் செவிப்புல ஊடகங்கள் வாயிலாக அரேபியப் பெண்கள் அதிகளவில் முன்னேறி வருகின்றனர்.

மேற்கு கரையில் இருக்கின்ற கட்டியாவின் சகாக்களான ஸ்ரீன் அபு அகெல் மற்றும் ஜீவரா அல்பதுயிர் நீண்டகாலமாக போர்க்கள அரங்கில் சிறைப்பட்டிருந்தனர். இம்முறை அவர்கள் தேச எல்லையின் ஈஸ்ராயில் பக்கத்திலிருந்து வட ஈஸ்ராயிலுக்குள் விழும் ஹிஸ்புல்லாக்களின் ஏவுகணைகள் குறித்து அறிக்கையிட முன்வந்தனர்.

ஜீலை 11ஆம் திகதிவரை லெபனானிய அரசியல் வாதிகளிடையே வரம்பின்றி காணப்பட்ட சண்டை சச்சரவுகளை அறிக்கையிட்டுக் கொண்டிருந்த புஷ்ரா அப்துல் சமாது நீல நிறத்திலான குண்டு துளைக்காத ஆடையையும் பாதுகாப்பு தலைக்கவசத்தையும் அணிந்து தென் லெபனானுக்குச் சென்ற முதல் நபராவார்.

துபாயின் அல் அரேபியா தொலைக்காட்சி பீருட் நகரின் தெற்கில் அமைந்துள்ள இன் அச்சே, ரீமா மக்ராபி மற்றும் நஜ்வா குவாசெம் ஆகிய உப நகரங்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள பாரிய குண்டுத் தாக்குதல்களை அறிக்கையிட பெண் செய்தியாளர்களை அனுப்பியது அருகிலுள்ள மலை உச்சியில் இருந்தவாறு சனநெரிசலான ஷியா பகுதிகளுக்கு ஆகாய மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் குண்டுத் தாக்குதல் மேற்கொள்வதை அவர்களால் காண முடியும். லெபனான் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் கடுமையாக மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களுக்கு ஆண் செய்தியாளர்களை விட அதிக எண்ணிக்கையான பெண் செய்தியாளர்களை அனுப்பியிருந்தன.

எல்பீசி தொலைக்காட்சியின் மொனா சலிபா முன்னேறிவரும் ஈஸ்ரயில் போர்வீரர்களுக்கும் ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்ற தீவிர யுத்தம் காரணமாக பிரசித்தம் பெற்ற தேச எல்லையருகில் காணப்படும் நகரமொன்றான பின்ட் ஜ்பெலிலிருந்து யுத்தத்தை அறிக்கையிட்டார்.

NTV இன் நன்சி சபியா தோலால் தயாரிக்கப்பட்ட மேற்சட்டையை அணிந்து பீருட்டின் தென்நகரங்களில் குண்டுத்தாக்குதல்களால் அழிவுண்ட குடிமனைகளை ஆராய்ந்தார்.

கட்டியா அது ஒரு பயங்கர சம்பவமென வர்ணித்தார்.

"அச்சமென்பது பொதுவானதொரு விடயம். தொலைமக்காட்சி படப்பிடிப்பாளர்கள் துணிச்சலால் அச்சத்தை அடிமைப்படுத்தி மறைத்து விடுவதாக அந்தப் பெண் தெரிவித்தார்".

தேச எல்லைப் பகுதிகளிலிருந்து தப்பிவரும் ஒருசில பத்திரிகையாளர்களை இலக்காகக் கொண்ட விதம் பற்றி கட்டியா தெரிவிக்கின்றபோது அந்த அச்சத்தை உணர முடிகிறது.

"நான் தூசினாலும் புகையாலும் மூடப்பட்டபோது திடீரென வாழ்க்கையின் சலனத்தை உணர்ந்தேன்" அவர்கள் பயணித்த ஐந்து வாகனங்களுக்கு முன்னும் பின்னுமாக எறிகணைகள் விழுந்த விதத்தை அவர் இவ்வாறு விபரித்தார்.

தென் லெபனான் வாசியான கட்டியா மரணமாகும் மற்றும் இருப்பிடங்களை விட்டு வெளியேறும் தென்பகுதி மக்கள் குறித்து தனது இரக்கத்தை தொலைக்காட்சிகள் வெளிப்படுத்துவதை தடுக்க பெரும் முயற்சி எடுத்ததை காண முடியும்.

"இப்பூமியில் நடக்கும் எந்தவொரு சம்பவத்தை விடவும் நான் மக்களை மதிக்கிறேன். இத்தாக்குதல்கள் எனது மக்கள் மீதே நடத்தப்படுகின்றன. தொலைக் காட்சி கமரா முன்னிலையில் தனிநபர் உணர்வுகள் மற்றும் நடுநிலை அறிக்கையிடல் காணப்பட்டாலும் திரைமறைவில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றி நான் ஆழ்ந்த கவலை கொள்வதாகவும்" கட்டியா தெரிவித்தார்.

பெண் செய்தியாளர்கள் பாதுகாப்பு உத்திகளை கையாளும்போது தொழில்சார் தன்மையில் ஆண்களை விடவும் கவனமாக இருந்துள்ளனர். ஆண் செய்தியாளர்கள் குணடுதுளைக்காத ஆடைகளின்றி ஆபத்தான இடங்களுக்குச் சென்றனர். ஒரு சிலர் அந்த மேலாடையை அணிந்தபோதும் பாதுகாப்பான தலைக்கவசத்தை அணிவதில் ஆர்வம் செலுத்தவில்லை.

எனினும் ஆபத்தான நிலைமைகளை எதிர் கொண்டதனால் பெண் செய்தியாளர்கள் விரைவில் பிரபலமானார்கள்.

அரேபிய நாட்டவர்கள் பலரிடமிருந்து கிடைக்கப்பெற்ற கட்டுரைகளை பார்த்த கட்டியா "நான் ஒரு வீரன்" என்றார்.

மேலும் அவர் "எனக்கு அளவுக்கு அதிகமாக பாராட்டுக்கள் வந்துசேர்வதாக நான் நினைக்கிறேன்" என்றார். தான் குண்டுகள் விழுந்ததால் அழிந்துபோன கிராமவாசிகளில் ஒருவர் என தன்னை அடையாளப்படுத்தினார்.

பீருட்டின் பெண் செய்தியாளர் ஒருவரை வர்ணித்த கல்ப் வலயத்தைச்சேர்ந்த பத்தி எழுத்தாளர் அவர்கள் தேர்ச்சிபெற்ற மேற்கத்திய செய்தியாளரான கென்ட் எயிடு மற்றும் கிறிஸ்ரியன் அமன்பொர்ட் ஆகியோரை விட முன்னிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளார். ■

http//www.wunrn.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள வாழ்வுக்கு மகளிர் இனவிருத்திச் சுகாதாரம்




பெண்கள் மனைவிமார், பணம் சம்பாதிப்பவர்களாகவும் நாளாந்த வாழ்வில் அதிகப்படியான கடமைகளில் ஈடுபடுபவர்களாகவும் சமூதாயத்தில் வேலைப்பளு மிகுந்த ஒரு பகுதியினராகவும் காணப்படுகின்றனர். தற்காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் நோய்கள், சுகாதாரப் பிரச்சனைகளை ஆழமாக நோக்கும்போது உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக ஏனையவர்களை விடவும் சிரமப்படும் பெண்கள் தங்களின் சுகாதாரம் பற்றி எந்தளவு கவனம் செலுத்துகிறார்கள் என்பதை அவதானிக்க முடியும்.

'சுகாதாரம்" பற்றி கதைக்கும்போது அநேகமான பெண்கள் காய்ச்சல், இருமல், தடிமன், நீரிழிவுநோய் மற்றும் இரத்த அழுத்தம் போன்ற தினசரி நோய்களுக்கு சிகிச்சை பெறுவதில் அதிக ஆர்வம் உள்ளவர்களாக காணப்படுகின்றனர். எனினும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசாரார் மாத்திரம் பெண்களுக்கே உரித்தானதும் விசேடமானதுமான இனவிருத்திச் சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் குறித்து கவனம் செலுத்துகிறன்றனர். சுகாதாரம் ஆண், பெண் இரு சாராருக்கும் பொதுவானது. ஆனால் பெண் சுகாதாரம் எனப்படுவது கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியதும் தமக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த மானுட வர்க்கத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்தும் ஒன்றாக இருப்பதால் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

## இனவிருத்திச் சுகாதாரம் என்றால் என்ன?

ஒருவருக்கு நோயின்றி வாழ்வதற்குத் தேவையான தேக நலன், மன அமைதி மற்றும் சிறந்த சமூக உறவுகளை குறைவின்றி பேணுவதற்கு அவசியமான பின்புலம் உருவாக்கப்பட்டிருத்தலும், சுகாதாரம் எனப்படுவது மிகவும் பரந்துபட்டதும் கடின அர்த்தத்தை உணர்த்தும் ஒரு விடயமாகவும் இனவிருத்திச் சுகாதாரத்தை பொருள்படுத்தலாம்.

இனவிருத்திச் சுகாதாரத்தில் இனவிருத்தித் தொகுதிகள் பிரதான பகுதிகளாகும். உடலின் உணவு சமிபாட்டுத் தொகுதி சுவாசத் தொகுதி போன்ற பல்வேறு தொகுதிகள் மத்தியில் இனவிருத்தித் தொகுதி வாழ்நாள் முழுவதிலும் பாரிய தாக்கத்தை உடலிற்கும் உள்ளத்திற்கும் செலுத்திவருகிறது.

> பெண் சுகாதாரம் எனப்படுவது பெண் பிள்ளை பருவம் எய்தியது தொடக்கம் திருமணம், குழந்தைபெறல், இறுதி மாதவிடாய் அடங்கலான அனைத்து இனவிருத்திச் செயற்பாடுகள் சார்ந்ததாகவும் மரணம் வரை தொடர்ந்துசெல்லும் அடிப்படை சுகாதாரத் தேவையாகும்.
>
> - இலங்கை குடும்பத்திட்டமிடல் சங்கம்

பல விதத்தில் தாக்கம் செலுத்தி, இனவிருத்தித் தொகுதியின் செயற்பாடுகளை வாழ்வின் செழுமையை தக்கவைத்துக் கொள்வதற்கு துணைபுரியும் முக்கிய காரணியாகும்.

பிரதானமாக பாலியல் நடவடிக்கைகளுக்கு ஏதுவாக அமையும் இனவிருத்தி தொகுதியின் செயற்பாடுகள் உடற் தேவைக்காக மாத்திரமின்றி மனிதனில் தோன்றும் பல உணர்ச்சிகளில் பாரிய தாக்கத்தையும் செலுத்துகிறது. மிகவும் எளிமையான எண்ணங்கள் கூட அச்செயற்பாட்டினுள் பாரிய விளைவை ஏற்படுத்தும் அதேசமயம் அதன் மூலம் இனவிருத்தி ஆற்றலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித விழுமியங்கள் தொடர்ந்திருப்பதற்கும் இளைய சமுதாய வாழ்வுக்கும் காரணமாக அமைந்து விடுகிறது. அவ்வாறான சிறந்த மானுட மற்றும் சமூக வாழ்வுக்கு பயனுள்ள ஒரு வளமாகவும் இனவிருத்தி சுகாதாரம் மேலும் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப் பிரகாரம் "இனவிருத்திச் சுகாதாரம் எனப்படுவது உடல் மற்றும் உறுப்புகளின் நிறைவே ஒழிய இனவிருத்தி தொகுதிகளின் செயற்பாடு மற்றும் அச்செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள நோய்கள், பலவீனங்களைத் தவிர்த்தல் மாத்திரமன்று" எனவே இனவிருத்தி சுகாதாரத்தின் மூலம் மக்களுக்கு திருப்திகரமானதும் பாதுகாப்பானதுமான பாலியல் உறவை மேற்கொள்வதற்கும் குழந்தைகள் பெறுவதற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கிடையிலான இடைவெளியைத் தீர்மானிக்கும் சுதந்திரமும் கிடைக்கிறது.

பருவமெய்தும் பெண் பிள்ளையில் தொடங்கி மாதவிடாய், துப்பரவேற்பாடுகள் திருமண பந்தத்தில் இணைவதுடன் குடும்பத் திட்டமிடல்களை மேற்கொள்ளுதல் குடும்பக்கட்டுப்பாடு, கர்ப்பிணிப் பருவம், பிரசவத்தின் பின்வரும் காலகட்டம், குறை செழுமை, மார்புப் புற்றுநோய், கருப்பை புற்றுநோய், எயிட்ஸ் சமூக நோய்கள், கருக்கலைப்பு மற்றும் இறுதி மாதவிடாய் ஆகியவை என பெண் இனவிருத்தி சுகாதாரத்தில் முக்கியமான பல காலகட்டங்களை தெரிவிக்க முடியும். பருவமெய்தியதிலிருந்து முதுமையடைதல் வரை இத்தடைகளைத் தாண்டி பயனுள்ளதும் மேலானதுமான வாழ்வொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அடுத்தவர்களின் பொறுப்பைவிட அதுபற்றி ஆர்வத்துடன் ஆராய்ந்து பார்த்தல் உங்கள் பொறுப்பென்பதில் பிழையில்லை.

ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் வேறுபட்ட இனவிருத்தி தொகுதிகளுக்கு சொந்தக்காரர்களாக இருந்தாலும் பெண்ணினுடைய இனவிருத்தி தொகுதிக்கு மேலான தன்மை கிடைப்பதால் பெண் பிள்ளை தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பிள்ளைகளை உருவாக்கும் ஆற்றல் பெண்களுக்கு மட்டுமே உண்டு.

தொன்றுதொட்டு நிலவி வரும் தந்தையை உயர்வாகக் கருதும் சமுதாய முறை மற்றும் பால்நிலையை அடிப்படையாகக் கொண்டு "பருவம்" எய்தல் அல்லது கன்னி "மாதவிடாய்" நிகழும்போது பெண்ணானவள் கலாசார ரீதியில் பாரபட்சமாக கவனிக்கப்படுகிறாள். அன்றாட கடமைகளிலிருந்து தள்ளி வைக்கப்படும் பெண் அறையொன்றில் தடுக்கப்படுவதால் அப்பெண்ணுக்கு நல்ல ஓய்வு கிடைக்குமென ஒருசாரார் எண்ணத்தக்கது. எனினும் முறையான துப்பரவேற்பாட்டு வசதிகள், உடற்பயிற்சி மற்றும் போசாக்கு உணவு வழங்குவதற்குப் பதிலாக எமது கலாசாரத்தின் மூலம் அவை கட்டுப்படுத்தப்படுகின்றன.

இதனால் சமூகத்தில் வேரூன்றிப் போயுள்ள பலதரப்பட்ட கருத்துக்கள், சிந்தனைகள் பெண்ணின் இனவிருத்தி தொகுதி வேகமாக வளர்ச்சியடையும் காலகட்டத்தில் உடலுக்கு உரிய போசாக்கு கிடைக்காமையால் "பெண் இனவிருத்தி சுகாதாரம்" எனப்படும் விசாலமான பாத்திரத்திற்கு தீங்கு இழைக்கப்படுகிறது.

சமூகத்தில் வேரூன்றிப் போயுள்ள பலதரப்பட்ட கருத்துக்கள், சிந்தனைகள் பெண்ணின் இனவிருத்தி தொகுதி வேகமாக வளர்ச்சியடையும் காலகட்டத்தில் உடலுக்கு உரிய போசாக்கு கிடைக்காமையால் "பெண் இனவிருத்தி சுகாதாரம்" எனப்படும் விசாலமான பாத்திரத்திற்கு தீங்கு இழைக்கப்படுகிறது.

மாதவிடாய் வெளியேறும் நாட்களில் யோனி சார்ந்த பகுதிகளில் பக்றீரியா (விசக் கிருமிகள்) உருவாவதற்கான வாய்ப்புகள் கூடுதலாக இருப்பதாலும் பக்றீரியா உட்செல்வதை தடுப்பதற்காக நாள்தோறும் முழுகுதல் குளித்தல் மூலம் உடலை சுத்தமாக வைத்திருக்க முடியும். பிற தினங்கள் போலல்லாது புரதச் சத்துக்கள், இரும்புச்சத்துள்ள உணவுகள், விற்றமின் மற்றும் கல்சியம் கலந்த அதிசக்திவாய்ந்த உணவு உட்கொள்ளல் முக்கியமெனக் கருதப்படுகிறது. இன்றேல் பிற்காலத்தில் செழுமை குறைதல் (குழந்தைபேறுக்கான) எலும்புகள் வலுவிழந்துபோதல் என்பன ஏற்படலாம்.

மருத்துவ விஞ்ஞானத்தின்படி போசாக்குள்ள உணவுகள், உடற்பயிற்சி மற்றும் நாள்தோறும் ஸ்நானம் செய்தல் ஆகிய மூன்று விடயங்களும் பருவமெய்திய ஒரு சிறுமிக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை தேவைகளாகும்.

ஒஸ்ரியோ – பொறோசில் அடங்கலான பல நோக்கங்கள் பெண்களுக்கு தொற்றாதிருப்பதற்கான வாய்ப்பு ஆரம்ப கட்டத்தில் உரிய போசாக்கு கிடைக்காமையால் அற்றுப்போகிறது. பெண் பிள்ளைக்கு தனிப்பட்ட விதத்தில் தன்னுடைய சுகாதாரம் குறித்து கவனம் செலுத்தத் தேவையான அறிவு மற்றும் சுகாதாரம் சார்ந்த உரித்துக்களை வழங்குவதில் காணப்படும் வரையறைகளும் இதற்கான இன்னொரு காரணமாகும்.

இனவிருத்தி, பாலியல் சுகாதாரம் போன்ற தலைப்புகள் குறித்து இளைஞர்களுக்கு அறிவூட்டுவதற்கு பாடசாலைக் கல்வி நூல்களில் ஒருசில விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ள போதும் ஆசிரியர்கள் அவ்விடயத்தை கற்பிப்பதில் பின்னடித்தல் அல்லது கைவிடுவதாக பல பாடசாலை மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சமுதாய முறைகளிலும் விழுமியங்களிலும் துரித மாற்றங்கள் நிகழும் காலகட்டத்தில் இளைஞர்களின் பாலியல் சார்ந்த எண்ணங்கள், அவற்றின் உண்மைத் தன்மைக்கு இனவிருத்தி சுகாதாரம் குறித்த பாரிய தாக்கம் காணப்படுவதால் அது பற்றியும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. 10 வயதிலிருந்து 19 வயது வரையான வாலிபர்களும் 20 – 24 வயதுடைய இளைஞர்களும் இனவிருத்தி சுகாதாரம் பற்றிய முறையான ஆலோசனைகளையும் தகவல்களையும் பெறுவதில் குறைந்த நாட்டம் உள்ளவர்களாக இருப்பதோடு இளைஞர்களுக்கு இனவிருத்தி சுகாதாரம் மற்றும் பாலியல் சுகாதாரம் பற்றிய அறிவு சொற்ப அளவே காணப்படுகிறது என உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

## குடும்பக் கட்டுப்பாட்டுக்கான உரிமை

குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பல இருக்கின்ற போதிலும் அவற்றிலிருந்து உசிதமானதும் இலகுவானதுமான முறையொன்றை வைத்திய ஆலோசனையின் பின்னர் கையாள தனிப்பட்ட முறையில் பெண்ணுக்கு உரிமை இருத்தல் முக்கியமானது. இலங்கையில் அநேகமான ஆண்களின் விருப்பமின்மையானது குடும்பக்கட்டுப்பாடு தொடர்பில் பெண்ணுக்குள்ள சுயநிர்ணயத்திற்கு தடையாக உள்ளது. அதனால் பெரும் சிரமத்திற்கு ஆளாகுபவர்களும் தற்போது பெண்கள்தான்.

மிகவும் வெற்றிகரமான குடும்பக்கட்டுப்பாட்டு முறையென கருதப்படும் ஆணுறை உபயோகத்தை பெரும்பாலான ஆண்கள் விரும்பாமை காரணமாக ஏற்படும் தேவையற்ற கருத்தரிப்புக்கள் காரணமாக பெண்கள் பாரிய பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர். குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் உரிய முறையில் பின்பற்றப்படாமையால் இலங்கையில் நாளொன்றுக்கு 1000ற்கு மேற்பட்ட சட்ட விரோத கருக்கலைப்புக்கள் இடம்பெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றில் 80% திருமணமான பெண்கள் எனத் தெரியவந்துள்ளது. அடிக்கடி கருக்கலைப்பு செய்வதால் சுகாதாரம் சீர்கெட்டுவிடும். அதேநேரம் உடலுக்குப் பொருத்தமற்ற சில குடும்பக்கட்டுப்பாடு முறைகள் கையாளப்படுவதால் அவை பெண்களுக்கு பக்க விளைவுகள் (Side Effects) ஏற்படவும் காரணமாக அமைந்துள்ளன.

## குறைந்த செழுமை

பிள்ளைகள் அற்ற பெண்கள் மற்றும் ஆண்களை சமூகத்தில் பெரும்பாலானவர்கள் "மலடு" எனக் கருதினாலும் கருவுறுதல் தாமதமாவதை வைத்தியர்கள் "குறைந்த செழுமை" எனக் கருதுகின்றனர். ஆண் அல்லது பெண்ணில் காணப்படும் இனவிருத்தி தொகுதிகளை முறையான பரிசோதனைகள் மூலம் செழுமை, செழுமையற்ற அல்லது குறைந்த செழுமை என்பவற்றை அடையாளம் காண முடியும். பெண்களைப் போன்று ஆண்களுக்கும் மலட்டுத் தன்மையடைய வாய்ப்புள்ள போதும் எமது சமூகத்தில் மலட்டுத்தன்மையானது பெண்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்ற தவறான சிந்தனைகள் வேரூன்றியிருத்தல் கவலைக்குரியது.

ஆண்களின் குறைந்த செழுமைக்கு பெரும்பாலும் புகைத்தலே காரணமென வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். இது தவிர புகைத்தல் ஆண்களின் பாலியல் குறைபாடுகளுக்கும் பெண்களின் செழுமை வீழ்ச்சிக்கும் காரணமாகிறது. பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் நிகழும் நேரடி மற்றும் மறைமுக புகைத்தல் காரணமாக பிள்ளைக்கு புகையிலை நஞ்சாவதாகவும் கருக்கலைப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், குறைமாத பிரசவம் அல்லது வலதுகுறைந்த குழந்தைகள் உருவாகலாமெனவும் தெரியவந்துள்ளது. அதேபோன்று புகைக்கும் ஆண்களின் மனைவிமாரிடையே கருப்பை புற்றுநோய்கள் அதிகம் காணப்படுவதாக ரோக்கியோவைச் சேர்ந்த ஆய்வுக்குழுவொன்று சமீபத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. சில சமயங்களில் குழந்தை பிறந்த மறுகணமே தாயின் உளரீதியான சுபாவம் வேறுபடுவதோடு மன அழுத்தம், திகைப்பு மற்றும் வேறு உடல் உபாதைகளும் எற்பட வாய்ப்புண்டு. இவை பற்றி கவனமின்மையால் சயிகோசியா எனப்படும் மனநோய் ஏற்படக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்ணொருவர் கருவுற முன், பின் உள்ள பருவங்கள் பற்றி வைத்திய ஆலோசனைகள் பெறுவதன் மூலம் பிரசவத்தின் போதும் பின்னரும் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை சிறப்பாக எதிர்கொள்ள முடியும். பெண்கள் போதியளவு எச்சரிக்கையுடனும் அறிவுடனும் இருந்தாலும் சில வேளைகளில் பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருசில வைத்தியர்கள், தாதியரின் கவனயீனம் காரணமாக தாயும் சேயும் மரணித்த பல சம்பவங்களை கடந்த நாட்களில் எமது நாட்டில் அறிய முடிந்தது.

## இறுதி மாதவிடாய்

நடுநிலைப் பருவத்தை அடையும் பெண்களின் உடலில் ஏற்படும் ஹோமோன்களின் மாற்றத்தினால் மாதவிடாய்ச் சக்கரம் நின்றுபோதல் இறுதி மாதவிடாய் எனப்படும். இவ்வாறு மாதவிடாய்ச் சக்கரம் நிற்பதால் நோய்த்தன்மைகள் பல ஏற்பட வாய்ப்புள்ளதோடு அவற்றுக்கு சிகிச்சை பெறுவதன் முக்கியத்துவத்தையும் மருத்துவ விஞ்ஞானம் சுட்டிக்காட்டியுள்ளது. உலகில் பல்வேறு நாடுகளில் வயது முதிர்ந்த பெண்களின் இறப்புகளுக்கு மாரடைப்பு காரணமாக உள்ளது. இதற்காக வைத்தியர்கள் அவ்வப்போது குருதி அமுக்கத்தை பரிசோதனை செய்தல், போஷாக்கு நிறைந்த உணவு உட்கொள்ளல், மேலதிக உணவுக் கட்டுப்பாடு உள அழுத்தத்தை குறைத்துக்கொள்ளல் மற்றும் முறையான உடற்பயிற்சி என்பவற்றை பரிந்துரை செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறுதி மாதவிடாய் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்திற்கான ஆரம்பம் எனக்கருதி முன்னாயத்தமாகவும் விழிப்பாகவும் இருப்பதன் மூலம் நோய்த்தன்மைகளை குறைத்துக்கொள்ள முடியும்.**

இறுதி மாதவிடாய் காரணமாக எலும்புகளின் பலம் குன்றுவதால் எலும்பு முறிவு, எலும்பு சுருங்குதல், முதுகெலும்புகள் சார்ந்த உபாதைகள், கூன்விழுதல், குள்ளமாதல், விஷேடமாக இடுப்பு மற்றும் முள்ளந்தண்டு, பகுதிகள் தெறிவுகளுக்கு இறுதி மாதவிடாய் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்திற்கான ஆரம்பம் எனக்கருதி முன்னாயத்தமாகவும் விழிப்பாகவும் இருப்பதன் மூலம் நோய்த்தன்மைகளை குறைத்துக்கொள்ள முடியும். இன் றேல் நோய்களுக்கு இலக்காகும் அபாயமும் ஏற்பட வாய்ப்புள்ளது. போதுமான கல்சியம் சேர்க்கப்படாமை இதற்கான பிரதான காரணமென வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நோய்வாய்ப்பட்ட பின்னர் கல்சியம் சேர்க்கப்படுவதால் உரிய பெறுபேறுகள் கிடைப்பதில்லை. எனவே இளம் பருவத்திலிருந்து தினசரி உணவு வேளைகளில் கல்சியம் நிறைந்த உணவை சேர்த்துக்கொள்ளல் அவசியமானது.

இறுதி மாதவிடாயை சந்தித்த பெண்கள் எதிர்நோக்கும் ஆபத்தான நோய்த்தன்மைகளாக மார்புப்புற்றுநோய் மற்றும் கருப்பை புற்றுநோயை குறிப்பிடலாம். இப்புற்றுநோய்களை தொடக்கக் கட்டத்தில் இனங்காணல் அவசியம் தற்போது கருப்பை புற்றுநோயை கண்டுபிடிப்பதற்கான "பப்" பரிசோதனை இலங்கையின் அனைத்து வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது அதிகம் காணக்கூடியதாயுள்ள மார்புப் புற்றுநோய் பற்றி இளம் பருவத்திலிருந்து விழிப்புடன் இருத்தல் வேண்டும். அவ்வப்போது சுயமான மார்புப் புற்றநோய் பரிசோதனை மூலம் அல்லது கிளினிக் மூலம் அனைத்துப் பெண்களும் பரிசோதனைகளை செய்துகொள்ள வேண்டும். அதனூடாக ஆரம்பகட்டங்களில் புற்றுநோயை அடையாளம் கண்டு கிசிச்சை அளிக்க முடிவதால் பாரதூரமான விளைவுகளை சந்திக்கும் அபாயத்திலிருந்து விடுபட முடிகிறது.

## மார்புப் புற்றுநோய்

மார்புப் புற்றுநோய் கருப்பைப்புற்றுநோய் என்பன ஏற்பட எம்மில் காணப்படும் அறிவின்மை, கவனமின்மை காரணமாகிவிடுகிறது. தொடக்கக் கட்டத்தில் இனம்கண்டு குணப்படுத்துவதற்குள்ள வாய்ப்பு அறியாமை காரணமாக அற்றுப்போவதால் புற்றுநோய் பற்றி அச்சமில்லாமல் கதைத்து அறிவுபெற வேண்டியுள்ளது. அந்தந்த புற்றுநோய் வகைகளுக்கு வேறுபட்ட நோய் அறிகுறிகளை அவதானிக்க முடிவதோடு மார்புப் புற்றுநோய் மற்றும் கருப்பை புற்றுநோய் என்பவற்றை பெண்களுக்கு மாத்திரம் ஏற்படும் விசேடமான நோய்த்தன்மைகள் எனலாம்

அநேகமான பெண்கள் கட்டாயமாக மார்பை அகற்ற வேண்டும் என்ற அச்சத்தையும் மனவுறுதியற்ற நிலையையும் கொண்டுள்ளனர். எனினும் தற்போது இதுகுறித்து அச்சமின்றி வேறு வைத்திய முறைகள் ஊடாக நோய்த்தன்மை முதிர்ச்சியடைவதை தடுக்கும் அதிநவீன வைத்திய முறைகள் காணப்படுகின்றன. பெண்களின் அறியாமை அல்லது கவனயீனத்தால் தொடக்க கடடத்தில் இனம்காண தவறுவதால் நோய் தீவிரமடைந்த பின்னர் வருந்த நேரிடுகிறது. பெரும்பாலும் ஹொமோன்கள், மரபணுத் தாக்கம், உணவில் அதிகூடிய கொழுப்புச் சத்து சேர்தல், 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கும் அவ்வயதெல்லையில் முதலாவது பிரசவம் இடம்பெறும் பெண்களுக்கு வேறுவகைப் புற்றுநோய் காணப்படும் பெண்களுக்கு மாதவிடாயின்போது அதிக குருதி வெளியேறல் மற்றும் கருப்பையில் உருவாகக்கூடிய Fibroide போன்ற கட்டிகள் உள்ளவர்களுக்கு மார்புப் புற்றுநோய் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக கருதப்படும் அதேநேரம் மேற்கூறிய விடயங்கள் குறித்து பெண்கள் விழிப்புடனும் இருத்தல் அவசியம்.

## கவனம் செலுத்தாமையின் பின் விளைவு

தற்காலத்தில் அநேகமான பெண்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அவர்களுடைய தேக நலன் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்துவதில் அசமந்தப்போக்கை கடைப்பிடிக்கின்றனர். இலங்கையில் நிலவும் பொருளாதார நிலைமைகள், பெண்களுக்கு இருபகுதி நெருக்கடிகள் (மனைவிக்குரிய கடமைகள் மற்றும் தொழிலில் ஈடுபடுவதால் ஏற்படுகின்ற உடல், உள நெருக்கடிகள்) குடும்பத்தினுள் வன்முறைகள் மூலம் சுகாதாரம் குறித்து கூடிய கவனம் செலுத்துவதற்குள்ள வாய்ப்பு அற்றுப்போகின்றது. வறிய பெண்கள் நெருங்க முடியாதளவில் வைத்திய சேவைகளுக்கான விலைகள் அதிகரித்துள்ளமை இதற்கான ஒரு காரணமாக குறிப்பிடலாம். இவ்வாறு இலங்கையில் சுமார் 80% பெண்கள் அவர்களுடைய சுகாதாரத்தை முறையாகப் பேணுவதில் தவறியுள்ளனர். பொருட்களின் விலைகள் உயர்வால் பல குடும்பப் பெண்கள் நாளாந்த செலவுகள், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய அத்தியாவசியத் தேவைகளுக்கு முதலிடத்தை வழங்கி தங்களுடைய சுகாதாரத்திற்கு இரண்டாமிடத்தை அல்லது இடமளிக்காதிருத்தல் அவர்களின் தவறாகும்.

பெண்கள் கட்டாயமாக அறிவு பெற வேண்டிய அதேசமயம் அதைப்பெறுவதற்கு சுயமான அர்ப்பணிப்பைச் செய்யவும் அவர்கள் முன்வர வேண்டும். இன்று இலங்கையில் பல பெண்கள் அறிவின்மை, கவனமின்மை காரணமாக தங்கள் உடல் நலன் குன்றுவதற்கு இடமளித்துள்ளனர். இதற்கான ஒரு உதாரணமாக குருநாகல் பிரதேசத்தைச் சோந்த, சமூகச் செயற்பாட்டாளரான சகோதரி சோமா குமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய உடல் நலன் குறித்து அசமந்தப் போக்கை பின்பற்றியதால் மரணம் அடைந்தார்.

கருப்பையில் ஏற்படும் ப/புரோயிட் (Fibroid) எனப்படும் கட்டி வகை காரணமாக பெண்ணொருவருக்கு மரணம் சம்பவித்தல் அபூர்வமெனப்படுவது மருத்துவர்களின் கருத்தாகும். இக்கட்டியை அறுவைசிகிச்சையின் மூலம் அகற்றிக் கொள்ளுமாறு அப்பெண்ணுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் மீண்டும் மீண்டும் ஆலோசனை வழங்கிய போதும், கருப்பைப் பகுதியில் மேற்கொண்ட சத்திரசிகிச்சையொன்றின் பின் தன் தாய் மரணமானதால் சோமா குமாரி அவ்வாறானதொரு அறுவை சிகிச்சைக்கு சம்மதம் தெரிவிக்க அவரின் மனம் இடமளிக்கவில்லை.

> தற்காலத்தில் அநேகமான பெண்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அவர்களுடைய தேக நலன் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்துவதில் அசமந்தப்போக்கை கடைப்பிடிக்கின்றனர். இலங்கையில் நிலவும் பொருளாதார நிலைமைகள். பெண்களுக்கு இருபகுதி நெருக்கடிகள் (மனைவிக்குரிய கடமைகள் மற்றும் தொழிலில் ஈடுபடுவதால் ஏற்படுகின்ற உடல். உள நெருக்கடிகள்) குடும்பத்தினுள் வன்முறைகள் மூலம் சுகாதாரம் குறித்து கூடிய கவனம் செலுத்துவதற்குள்ள வாய்ப்பு அற்றுப்போகின்றது.

சிறு பராயம் முதல் மரபு ரீதியான சமுதாய சூழலில் மட்டுப் படுத்தப்பட்ட வரம்பினுள் பெரும்பாலான பெண்கள் தமது வாழ்நாளைக் கழிப்பதால் அவர்கள் தங்களுடைய உடலுடன் சம்பந்தப்பட்ட விசேடமாக இனவிருத்தி சுகாதாரத்துடன் தொடர்புடைய நோய்களை மறைப்பதையும் தகுந்த சிகிச்சைகளை கைவிடுவதும் விசேடமாக கிராமிய மட்டத்தில் அவதானிக்க முடியும். சமூக செயற்பாட்டாளராக பணியாற்றினாலும் பால்நிலை அடிப்படையில் பெண்களின் இனவிருத்தி சுகாதாரம் குறித்து நிலவும் மரபுரீதியான சமூதாய சிந்தனைகளிலிருந்து விடுதலைபெற தானும் துணிவிழந்ததால் துரதிஷ்டவசமாக சோமா குமாரியும் உயிரிழக்கிறார். இவரின் மரணத்திலிருந்து பெண்களின் இனவிருத்தி சுகாதாரம் சம்பந்தமான நோய்கள் மேலும் மறைக்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்பதையும் இவை சிகிச்சை பெறாமலிருந்துவிடக் கூடியவை அல்ல என்பதையும் நாம் மனதிலிருத்திக்கொள்ள வேண்டும்.

பெண்களின் சுகாதாரம் பற்றிய அரச கொள்கைகளை வகுக்கும் நிறுவனங்களும் பீஜிங் செயற்பாட்டு வேலைத்திட்டமும் பெண்களுக்கெதிரான அனைத்துவித பாரபட்சங்களையும் இல்லாதொழிக்கும் உடன்படிக்கை என்று சொல்லப்படுகின்ற "சீடோ உடன்படிக்கை" போன்ற அனைத்துலகப் பிரகடன வாயிலாக பெண்களின் இனவிருத்தி சுகாதாரத்திற்கு விசேட வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான மூலோபாயங்களை வகுத்தல் மற்றும் சமத்துவமானதும் பொருத்தமானதுமான சுகாதாரச் சேவைகளை அவர்கட்கு வழங்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எமது நாட்டில் பல்வேறு துறைகள் மற்றும் தராதரங்களைக் கொண்டுள்ள அநேகமான பெண்களுக்கு யுத்தம் மற்றும் தொழிற்றுறையில் காணப்படும் முறைசாரா நிலை இனவிருத்தி சுகாதாரத்தில் பிரச்சனைகளைத் தோற்றுவிக்க ஏதுவாகவுள்ளன. யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள பெண்களும் பிள்ளைகளும் போஷாக்கு, துப்பரவேற்பாடுகள் மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். ஆடைத்தொழிற்துறையில் உள்ள பெண் ஊழியர்களின் நிலையிலும் மாற்றம் இல்லை. தினசரி கூலிக்கு வேலைசெய்யும நடைபாதை வியாபாரப் பெண்களுக்கு சிறுநீர் கழிப்பதற்காக மலசலகூட வசதிகள் கூட போதியளவு இல்லையென்றே கூறலாம். குளித்தல், ஏனைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாதுள்ள வீதியோரப் பெண்களும் துப்பரவின்மையால் பல்வேறு நோய்கள் தேவையற்ற கருத்தரிப்புக்கள் போன்ற பல சுகாதார பிரச்சனைகளை சந்தித்துள்ளனர். வறுமை, சுகாதார வசதிகளை அடைய முடியாதுள்ளமை, நடமாடும் சுகாதார வசதிகள் இன்மை போன்ற காரணங்களால் இந்நிலைமையை சந்தித்துள்ள பெண்களை நாம் மறந்துவிடக் கூடாது. பெண்களில் அறிவின்மை மற்றும் கவனமின்மையால் ஏற்படும் பொதுவான சுகாதார, இனவிருத்தி சுகாதாரப் பிரச்சனைகள் குறித்து உரிய கவனம் செலுத்தி முன்னுரிமை வழங்கி தேகாரோக்கியம் நிறைந்த மகளிர் சமூகம் ஒன்றை உருவாக்க பெண்களாகிய நாம் தற்போதேனும் திடசங்கற்பம் கொள்வோம். ■

**வேலாயுதன் ஜெயசித்திரா**

**அன்பான வாசக நெஞ்சங்களே உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**எமது முகவரி :**
பெண்களும் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பினரும்
174, அல்விஸ் அவனியூ, காசல் வீதி,
கொழும்பு – 08, இலங்கை.



தொலைபேசி - 00 94 115632045, 5635900
தொலைநகல் - 00 94 112690201
மின்அஞ்சல் - womedia@sltnet.lk அல்லது options@sltnet.lk



# சுனாமியால் இருப்பிடங்களை இழந்த நாம் மீண்டும் யுத்தத்தால் இட்பெயர்ந்தோம்

## மூதூரிலிருந்து வந்தவர்களின் சோகக்கதை...

கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து கொண்டிருந்த மோதல்கள் தீவிரமடைந்ததன் காரணமாக மூதூர், தோப்பூர் பகுதிகளில் வசித்த பெரும்பாலான தமிழர்களும் முஸ்லிம்களும் அவர்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். இவ்வாறு இடம்பெயர்ந்த சுமார் இரண்டு இலட்சம் பேரில் அநேகமானோர் கந்தளாய் நகரை வந்தடைந்ததோடு இன்னும் சிலர் அக்கரைப்பற்று, அம்பாறை மற்றும் கல்முனை பிரதேசங்களுக்கும் தெற்கின் ஒருசில பிரதேசங்களுக்கும் வந்துசேர்ந்தனர். மூதூரிலிருந்து வந்த ஒருபகுதியினர் குருணாகலை தம்புள்ள வீதியின் இப்பாகமுவ பக்மீகொல்வ அல் - அமினா இஸ்லாமியப் பாடசாலையில் தஞ்சமடைந்திருக்கும் அதேவேளை அவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் பிள்ளைகளும் ஆவர்.

நூற்றி இருபத்தியிரண்டு பேரைக்கொண்டுள்ள இக்குழுவில் ஐம்பத்தேழு பெண்களும் (57) பன்னிரெண்டு (12) பிள்ளைகளும் காணப்படுகின்றனர்.

பக்மிகொல்லவை அண்டிய இம்பாகமுவ பிரதேசத்தில் வசிக்கும் இஸ்லாமியர்களும் சிங்களவர்களும் இதர தமிழ் மக்களும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து அடைக்கலம் தேடிவந்த இவர்களுக்கான உணவு, தண்ணீர், துணிமணிகள் போன்ற அத்தியாவசியத் தேவைகளை பூர்த்திசெய்வதில் பின்நிற்கவில்லை. அணிந்திருந்த ஆடைகளுடன் வெளியேறிய இவர்களுக்கு வாழ்நாள் முழுவதுமாக தாங்கள் சம்பாதித்த ஒரு பொருளையேனும் எடுத்து வர முடியவில்லை. இதில் ஒரு சாரார் சுனாமியால் பாதிக்கப்பட்டு தமது வீடு வாசல்களை இழந்து நிவாரண முகாம்களில் ஒன்றரை வருடத்தை கழித்த பின் கிடைத்த வீட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். பாதியளவில் நிர்மாணிக்கப்பட்ட தங்களுடைய வீடுகளை விட்டு வெளியேறும் நிலை அவர்களுக்கு எற்பட்டது. அவர்களுடன் கருத்துக்களை பரிமாறுதல் சிங்களவர்களுக்கு சிக்கலாக அமைந்த போதும் சுற்றுவட்டத்தில் வசித்த சிங்கள மொழி தெரிந்த இஸ்லாமியர்களின் ஒத்துழைப்பு கிடைத்ததால் அதை சமாளிக்க முடிந்துள்ளது.

மூதூரிலிருந்து தோப்பூர்வரை சுமார் 8 மைல் தூரத்தை பிள்ளைகளையும் காவிக் கொண்டு நடந்து வந்ததாக எமக்கு தெரிவித்தார்கள். அவர்கள் தோப்பூரிலிருந்து உழவு இயந்திரங்கள் மூலம் கந்தளாய் நகரை அடைந்துள்ளனர். தாங்கள் மூதூரை கைவிட்டு வரும்பொழுது இடைநடுவில் துப்பாக்கி ரவைகள், மோட்டார் குண்டுகள் காரணமாக காயமுற்றவர்களையும் கைகால்களை இழந்த சாதாரண மக்களையும் சந்தித்ததாகவும் தெரிவித்தார்கள். காயமடைந்தவர்களை எடுத்துவர அல்லது அவர்களுக்க பரிகாரம் செய்ய முடியாததால் அணிந்திருந்த சேலைகளை கிழித்து காயங்களை கட்டிவிட்டு இருந்த இடத்திலேயே அவர்களை கைவிட்டு வர நேர்ந்ததாக கண்ணீர் மல்க கூறினார்கள். இவர்களிடையே இளம்பெண்களும் பெண்களும் தாம் அவதானித்ததாகவும் தெரிவித்தனர்.

இராணுவ முகாம்கள் மற்றும் எல் ரி ரி ஈ கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு மத்தியில் வசித்த இவர்கள் தங்கள் வீடுகளை நோக்கிவரும் மோட்டார் குண்டுகள் எப்பக்கத்திலிருந்து வருகிறது என்பதை கூற முடியாத நிலையில் உள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டதிலிருந்து அச்சம் சந்தேகம் இன்றி வாழ்ந்ததாக கூறும் பெண்கள் கருத்து கூறுகையில் சமாதானம் வெகுவிரைவில் மீண்டும் நிலைநாட்டப்படுமானால் தமக்கு சுதந்திரமாக வாழ வாய்ப்புண்டென தெரிவித்தனர். தென்பகுதிவாழ் இஸ்லாமிய மற்றும் சிங்களவர்கள் தங்களை நன்றாக கவனிப்பதை மிக உயர்வாக கூறும் அவர்கள் யுத்தமின்றி அமைதியாக வாழ்வதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி யுத்தம் காரணமாக தங்கள் வாழ்வு சீரழியும் விதத்தை நினைவுகூறி கவலை தெரிவித்தார்கள். ■

சுமிக்கா பெரேரா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இனப்பெருக்க சுகாதார பிரச்சனைகளும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் இலங்கைப் பெண்களின் அனுபவங்களை ஆவணப்படுத்தல்[1]

பெண் தொடர்பு ஊடக கூட்டமைப்பு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெண்கள் எதிர் நோக்கும் இனப்பெருக்க சுகாதார பிரச்சனைகளை பற்றிய ஆய்வினை 2003/5ல் நடாத்தியது. நாடளாவிய ரீதியில் அரச சகாதார சேவை பாராட்டுக்குரிய வகையில் காணப்பட்ட பொழுதிலும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் காணப்படும் இனப்பெருக்க சுகாதார சேவையின் நிலைமை பற்றிய விரிவான மற்றும் தெளிவான தரவுகள் கடந்த இரண்டு வருடங்களாக கிடைக்க பெற முடியாத சிக்கல் நிலை முக்கியமானதோர் பிரச்சனையாக காணப்படுகின்றது. இனபெருக்க சுகாதார சேவை தொடர்பாக பெண்களின் சுதந்திரம் மற்றும் தகுதிகள் போன்றவற்றை இனங்காணும் உரிமைகள் வரையமைப்பை கொண்டு கொள்கைகள் உருவாக்கம், கல்வி சார் விவாதங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் தலையீடுகளில் பெண்களின் குரல்களை ஒலிக்கச் செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

இவ்வாய்வு யாழ்ப்பாணம் (வடக்கு), மன்னார், புத்தளம் (வடமேற்கு), பொலநறுவை எல்லைக் கிராமங்கள் (வடமத்திய) மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை (கிழக்கு) போன்ற மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைப்பெற்ற ஆயுத மோதல்களில் நேரடியாக பாதிக்கப்பட்ட அல்லது போரின் காரணமாகப் பரந்தளவில் வேறு பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த சமுதாயங்கள் என்ற அடிப்படையில் இம்மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. ஆறு மாவட்டங்களில் 560 பெண்களிடம் நேர்காணல் நடாத்தப்பட்டது. சுகாதார சேவைகளைப் பெற்று கொள்வதைப் பற்றி பெண்களால் பகிர்ந்து கொள்ளப்பட்ட அனுபவங்களை முன் வைத்து இனப்பெருக்க சுகாதார நல்வாழ்விற்கு அனுக்கிரகம் செய்த குடும்ப மற்றும் சமூக உறவுகளை விரிவாக ஆராய்வதே இவ்வாய்வின் குறிக்கோளாகும்.

பெண்களின் சுகாதார நல்வாழ்விற்கு இனப்பெருக்க சுகாதார சேவை தொடர்பான தகவல்களையும் சேவைகளையும் பெற்றுகொள்ளத் தடையாகவுள்ள கட்டமைப்புக் கூறுகளையே இவ்வாய்வு முழுவதும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள பெண்களின் அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சமாதானமும் நீதியுமல்லாத ஆனால் போரற்ற சூழ்நிலை மாற்றங்களைக் கொண்ட காலக்கட்டத்தில் வாழும் யதார்த்த நிலைக்குத் தள்ளப்பட்டுப் போராடி கொண்டு இருக்கும் பெண்கள்



முகங்கொடுக்க வேண்டிய விடயங்களும் இவ்வாய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

## பருவமடைதல், திருமண வயது மற்றும் மகப்பேற்று வயது.

போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இளவயதில் மற்றும் திருமண வயதுக்கு முன்னரே விவாகம் நடைபெறுவது வழக்கமாகவுள்ளதென்ற கருத்துப் பரவலாகக் காணப்படுகின்றது. அதிக எண்ணிக்கையிலான பெண்கள் மிகவும் இள வயதிலேயே விவாகம் செய்து அதை தொடர்ந்து குழந்தைகளையும் பெற்றெடுத்துள்ளனர்.[2]

| 15-18 வயதுக்குமிடையில் விவாகம் செய்தோர் | |
|---|---|
| அம்பாறை | 50% |
| பொலநறுவை | 54% |
| புத்தளம் | 51% |
| மட்டக்களப்பு | 30% |

| 15-18 வயதுக்குமிடையில் முதலாவது மகப்பேறு | |
|---|---|
| அம்பாறை | 33 % |
| பொலநறுவை | 46 % |
| புத்தளம் | 46 % |

இவ்வாறு திருமணம் செய்த பெண்கள் இளம் வயதில் கருத்தரித்தவுடன் அல்லது சில குழந்தைகளை பெற்றெடுத்த பின்னர் கணவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடப்படுகின்றனர். அத்துடன் இவ்விளம் கணவர்கள் மறுமணம் செய்ய முனைகின்றனர். குழு கலந்துரையாடல்களின் பொழுது சில தனிப்பட்ட நிகழ்வுகளைப் பற்றி உரையாடினர். உதாரணமாக 15 வயதில் கருத்தரித்த பெண்ணொருவர் கணவரால் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்ட கதையை அங்கிருந்த ஒருவர் கூறினார். மேலும் அப்பெண் இரட்டைக் குழந்தைகளுக்கு தாயானதையும் அதிலோர் குழந்தை உயிரிழந்ததை பற்றியும் கூறினார்.

## இறுதி மாதவிடாய்

இறுதி மாதவிடாய் தொடர்பான விழிப்புணர்வு கேள்விகள் எழுப்பப்பட்ட பொழுது 41-60 வயதுப் பெண்களில் அதிகமானோர் தாங்கள் தனிப்பட்ட முறையில் இந்நிலைக்கு முகங்கொடுக்க முன்னர் இது சம்பந்தமான எவ்வித தகவல்களும் தங்களுக்குக் கிடைக்கபெறவில்லை எனக் கூறினர். பொதுவாக பெண்கள் மத்தியில் இது தொடர்பாக அவ்வளவாக பேசப்படவில்லை எனவும் இறுதி மாதவிடாய்க்கு முகங் கொடுக்கும் பெண்களை விட வேறு வயதுப் பிரிவுப் பெண்களும் அவர்களது வாழ்வின் உடல் நிலை மாற்றங்களைப் பற்றி சிறிதளவிலேயே கலந்துரையாடுகின்றனர் எனவும் இதன் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. இனபெருக்க உரிமைகள் உரையாடல் மற்றும் பெண்கள், சுகாதர சுகவாழ்வினை புரிந்து தங்களைத் தாங்களே பராமரிக்க அதிகாரம் கொடுக்கும் முக்கியத்துவத்தினை அங்கீகரித்தல் போன்ற முறைமைகளினூடாக விரிவான சுகாதாரக் கல்வித் திட்டங்களின் அவசியத் தேவை தெட்டத்தெளிவாகின்றது.

## தெளிவான முடிவு

அரசாங்க பாடசாலைகளில் கற்கும் உயர்தர மாணவர்களுக்கு இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் சுக வாழ்வு சுகாதாரம் தொடர்புபட்ட வெளியீடுகளை விநியோகிக்க கல்வி அமைச்சு சுகாதார அமைச்சுடன் இணைந்து அண்மைக் காலங்களில் முயற்சிகளை மேற்கொண்ட பொழுதிலும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகள் தொடர்பான தகவல் மற்றும் விழிப்புணர்வு கல்வி திட்டம் மற்றும் முறைமையில் இது ஒரு முக்கிய பகுதியாக விளங்கவில்லை. தகவல்களைப் பெற்று கொள்வதிலிருந்து கட்டுப்பாடுகளை விதிப்பதில் கலாசார மற்றும் சம்பிரதாய வழக்கங்கள் அடிப்படையிலேயே முக்கியத்துவம் செலுத்துகின்றன. பாலியல் கல்வியை இஸ்லாம் தடை செய்துள்ளது. இதனால் இளவயதில் திருமணம் செய்யும் பெண்கள் தங்களது உடல் நிலை மாற்றங்கள் தொடர்பாக எதுவும் அறியாதவர்களாகக் காணப்படுவதோடு அவர்கள் பாதிப்புள்ளாகும் நிலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சகல மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளில் கற்கும் க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரக் கல்வியை அறிமுகப்படுத்துமாறு பெண்கள் மையக்குழு ஒரு பலத்த குரலை எழுப்பியது.

## கருச்சிதைவு

அநேகமாக 20-23 வயதெல்லைக்குட்பட்ட பெண்கள் மத்தியிலேயே கருச்சிதைவு ஒரு சாதாரண நிகழ்வாக காணப்படுகின்றது. அத்துடன் முக்கியமாக அம்பாறை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் 23 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மத்தியிலும் இது நடைப்பெறுகின்றது. பொதுவாக அம்பாறை மாவட்டத்தில் வெவ்வேறு வயதுப்பிரிவிலுள்ள பல பெண்கள் கருசிதைவுக்கு முகங்கொடுத்துள்ளனர். கருச்சிதைவுக்கு முகங் கொடுக்க நேரிட்ட பொழுது வைத்தியர்களின் அல்லது மருத்துவச்சி உதவியை நாடியதாகப் பல பெண்கள் தெரிவித்தனர். செவி வழி மரபு முறையை சார்ந்த மருத்துவத்தைக் கையாண்டதாக அல்லது எவ்வித உதவியையும் பெறவில்லை என மிகச் சிலரே கூறினர்.

## வீட்டு மகப்பேறு

தெரிவு செய்த மாவட்டங்களில் நேர்காணல் நடாத்தப்பட்ட மக்களின் மூலமாக மகப்பேறு நடைப்பெறும் முக்கிய இடமாக அரச மருத்துவ சேவை முறை நடைப்பெறும் இடங்களே கருதப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. எனினும், வசிக்கும் இடங்களுக்கு அண்மையிலுள்ள துணைநலன்களின் அழிவு மற்றும் வறுமை, கலாசார வழக்கங்கள் போன்ற காரணிகளால் 15.8 சதவீதமான மகப்பேறு வீடுகளில் இடம் பெறுகின்றதென நேர்காணல் நடாத்தப்பட்டவர்கள் கூறினர். வைத்தியசாலைகளை நாடி செல்ல தேவையானவைகளான போக்குவரத்துக்கான பணம், வைத்தியசாலையில் இருக்கும் காலத்தில் அணியத் தேவையான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சுத்தமான உடைகள் போன்ற பல தேவைகளை வறிய குடும்பங்களினால் பூர்த்திசெய்ய முடியாத காரணத்தினால் சில பெண்கள் தங்களுடைய மகப்பேற்றிற்காக வைத்தியசாலைகளை நாடுவதை தவிர்த்துக் கொள்கின்றனர் என இவ்வாய்வின் மூலமாக அறியக்கூடியதாகவிருந்தது.

## வீட்டு வன்முறைகள்

இவ்வாய்வின் பகுதியான நேர்காணல் நடாத்தப்பட்ட பெண்கள் மத்தியில் வன்முறைகள் அதிகமாக காணப்படுவது ஆச்சரியப்படுவதற்கேதுவான விடயமாக இல்லாத பொழுதிலும் ஓர் வித கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

| வீட்டு வன்முறை அனுபவங்கள் | |
|---|---|
| அம்பாறை | 49% |
| புத்தளம் | 67% |
| பொலநறுவை | 30% |
| மட்டக்களப்பு | 28% |
| யாழ்ப்பாணம் | 20% |
| மன்னார் | 14% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் தாய், தந்தை மற்றும் தமயன்மார்களே இவ்வாறான குற்றங்களை இழைத்தவர்களாகக் கருதினாலும் முக்கிய மற்றும் வழக்கமான குற்றவாளியாகக் கணவரே கருதப்படுகின்றார். மணவினை வன்முறைகளைக் பொருத்தவரையில் திருமணத்தின் பின் மூன்று வருடங்களுக்குள் முதலாவது வன்முறைக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதென அநேகமான பெண்கள் தெரிவித்தனர். குடும்ப வன்முறைகள் ஒரு தடவை மாத்திரம் நடைபெறும் நிகழ்வாக அமையாது ஓர் தொடர் நிகழ்வாகவே அமைந்ததென அதிகமான பெண்கள் கூறினர். குடும்ப வன்முறைக்கான பிரதான காரணம் சீதனப் பிரச்சினையாக வடக்கிலுள்ள பெண்கள் கருதினர். குடும்ப வன்முறை, பாலியல் உறவுகள் மற்றும் கருத்தடுப்பு பாவனை போன்றவற்றுக்கிடையே ஓர் திடமான தொடர்பு தென்பட்டது

அக்கறை செலுத்தும் குழு கலந்துரையாடல்களில் தங்களது சமூகத்தில் உள்ள பெண்கள் முகங் கொடுக்கும் அனுபவங்களை பற்றி வெளிப்படையாகப் பேசினர்.

> "கருத்தடை முறைகளை உபயோகிப்பதன் மூலம் திருமணத்திற்கு புறம்பான கள்ளத் தொடர்புகளை பெண்கள் மேற்கொள்ளுவார்கள் என எண்ணி தன்னுடைய மனைவியை கருத்தடை முறைகளை உபயோகிப்பதிலிருந்து கணவன் தடுக்கிறான். இதனால் பெண்கள் ரகசியமாகக் கருத்தடை முறைகளை பயன்படுத்துகின்றனர். எனினும், கணவர் இதை அறியும் தருணத்தில் தாம்பத்திய உறவில் துரோகம் இழைத்தவராக மனைவியின் மீது குற்றஞ் சுமத்தி அவளை வன்முறைக்குட்படுத்துகிறார். இடம்பெயர்ந்த சமுதாயத்தினரிடையே இது பரவலாகக் காணப்படுகின்றது.
> **(மன்னார், பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியவர்).**

குடும்ப வன்முறை நிகழ்வுகளின் பொழுது சட்டத்தின் மூலம் நியாயத்தை பெற முயலும் ஒதுக்கப்பட்ட சமுதாயம் பெண்களைத் தவிர்க்க கட்டமைப்பு காரணிகளும் காணப்படுகின்றது. சட்ட முறைமை அலுவலர்களான போலீஸ் அதிகாரிகள் ஆண்களாகவும் பெரும்பான்மை இனமான சிங்கள இனத்தைச் சேர்ந்தவராகவும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த சமுதாயத்தின் மொழியினை (தமிழ்) பேசாதவராகவும் காணப்படு-கின்றமை மேற்குறிப்பிட்ட காரணிகளில் சிலவாகும்.

முஸ்லீம் பெண்களுக்குக் காணப்படும் மரபு ரீதியிலான சட்டங்கள் பெண்களின் சுதந்திரம், உரிமை, மற்றும் சுகவாழ்வு போன்றவற்றைத் தடுக்கும் மற்றுமோர் கட்டமைப்பு காரணியாக விளங்குகின்றது. விவாகரத்து வழக்குகள் 'காஸி' நீதிமன்றத்தாலேயே நடாத்தப்படுகின்றது. இது அரச சட்ட முறைமைக்கு புறம்பானது.

> "'காஸி' நீதிமன்றம் பாரபட்சமானது. ஆண்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஜூரி சபையில் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்-படுவதில்லை. பெண்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் பெண் பிரதிநிதிகள் இந்நீதி மன்றங்களில் காணப்பட வேண்டும்." **(மன்னார், பயிற்சிப்பட்டறையில் பங்கு பற்றியவர்).**

## திருமணத்தில் கட்டாயப் பாலுறவு

முக்கியமாக இடம்பெயர்ந்த பிரதேச சூழ்நிலையில் கட்டாய பாலுறவினைத் தங்களுடைய கணவர்களுடன் மேற்கொள்ள கணவர்களாலேயே நிர்ப்பந்திக்கப்பட்டனர் எனப் பல பெண்கள் கூறினர். குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஓர் அறையிலேயே வாழ நேரிட்டமையாலும் அந்தரங்கத் தன்மை இல்லாத காரணத்தினாலும் பெண்கள் தங்களுடைய கணவருடன் பாலியலுறவினை மேற்கொள்ள விரும்பவில்லை.

> "சில வேளைகளில் தங்களுடைய சொந்தக் குழந்தைகளின் முந்நிலையில் பாலுறவினை மேற்கொள்ளப் பெண்கள் கட்டாயப்-படுத்தப்பட்டனர். இது பெண்கள் மத்தியில் பாலுறவு மேற்கொள்வதில் அருவருப்பை ஏற்படுத்தியுள்ளது." **(மன்னார்).**

இலங்கையின் சட்ட முறைமையோ சமூக கலாசார வழக்கங்களோ திருமணம் சார்ந்த பலாத்காரத்தினை ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் விடயமாக கண்டிக்கவில்லை. திருமண பந்தத்தில் பலாத்காரம் என்ற ரீதியில் பாலுறவினை எப்பொழுது எங்கு மேற்கொள்வது என்பதை தீர்மானிக்கும் பெண்களின் சுதந்திரம் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் தங்கள் உடல் மீதான பெண்களின் உரிமைகள் போன்றவை பாதுகாக்கப்பட வில்லை. பாலுறவுக்கு மேற்கொள்வதற்கு முன்னராக மது அல்லது போதைப் பொருளை உட்கொள்ள தங்களது கணவர்களால் கட்டாயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்க-ளைப் பற்றி பெண்கள் கதைத்தனர்.

## பாலியல் வயது திருமணம்

> சிறுவர் கடத்தல் போன்ற பாதுகாப்பு காரணங்களைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்களது பெண் பிள்ளைகளுக்கு மிகவும் இள வயதிலேயே திருமணம் செய்து வைக்கின்றனர். அத்துடன் ஓர் இளம் தாயாக அவளது குழந்தை பருவம் எய்தும் பொழுது நன்கு பராமரிக்கபடுவாள் என பெற்றோர்கள் எண்ணுகின்றனர். **(மட்டக்களப்பில் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றியவர்)**

புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், பொலநறுவை மற்றும் மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் நடை பெற்ற அக்கறை செலுத்தும் குழு கலந்துரையாடல்களின் மூலம் பெண்களுக்கு மிகவும் இளம் வயதிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்யும் வழக்கம் பரவலாகக் காணப்படுகின்றது என்பது வெளிவந்தது. பெற்றோர்களால் ஆதரிக்கப்பட்ட இவ்வழக்கத்திற்கான முக்கிய காரணங்களாக வறுமை, அலட்சியம், மற்றும் சமூக பொருளாதாரப் பாதுகாப்பின்மை போன்றவையாகும். சில மாவட்டங்களைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட சில காரணிகள் இதற்கு காரணமாகவிருந்தன. உதாரணமாக, பொலநறுவை மாவட்ட எல்லைக் கிராமங்களில் கிராம மக்கள் ஊர்காவற் படையினராகச் சேர்த்துக் கொள்ள படுகின்றமையாலும், ஆயுதப் படையில் பதிந்த பின்னர் அவர்களது வீடுகளை விட்டு நீண்ட காலமாகச் சேவை செய்கின்றமையாலும் ஆயுத படையினரின் நடமாட்டத்திற்கு ஆளான ஒரு பிரதேசமாக அது காணப்படுகின்றது. இது இப்பிரதேசத்தின் திருமண மற்றும் பாலியல் உறவுகள் தொடர்பான சமூக வழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தக் காரணமாகவுள்ளது. மிகவும் இள வயதிலேயே திருமண பந்தத்தில் இணைவது, வறுமை மற்றும் பல இன்னல்களுக்கு ஓர் நடைமுறை தீர்வாகக் கொள்ளப்படுவதனால் பெற்றோர்கள் இம்மார்க்கத்தை தெரிவு செய்யுமாறு இளம் பெண்களுக்கு ஊக்கப்படுத்துகின்றனர். குடும்ப வட்டத்துக்குள் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் ஓர் சாதாரணமான நிகழ்வாக காணப்படுவதன் காரணத்தினால் பொற்றோர்கள், அதிலும் முக்கியமாக தாய்மார்கள் தங்களது இளம் வயது பெண் பிள்ளைகளை உடனடியாகத் திருமண பந்தத்தில் இணைப்பதன் மூலம் தங்களது குடும்பத்திலுள்ள ஆண் அங்கத்தவர்களினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர் என கருதுகின்றனர். மட்டக்களப்பில் ஆயுத குழுக்களால் சிறுவர் படைக்குள் சேர்க்கபடுவதிலிருந்து பாதுகாக்க இருப்பாலாரினையுமே மிக இளவயதிலேயே திருமண பந்தத்தில் இணைப்பதை பெற்றோர்கள் மிகவும் ஆதரித்து செயற்படுத்துகின்றனர்.

## கருகலைப்பு

கருவுற்ற சூழ்நிலையை கருத்திற் கொள்ளாது கருகலைப்பினை ஓர் குற்ற செயலாகக் கருதுவது தற்பொழுதும் ஓர் அக்கறைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. தானாகவே கருகலைக்கும் முறையானது பரவலான நிகழ்வாக பெண் தொடர்பு ஊடக கூட்டமைப்பு தகவல்களை வெளிப்படுத்தாத போதிலும் 19-40 மற்றும் 41-60 வயதுப்பிரிவில் காணப்படும் பெண்கள் தாங்கள் தாமாகவே கருகலைக்கும் முறையை நாடியதாகத் தெரிவித்தனர். நிதி நெருக்கடி மற்றும் இன்னுமொரு குழந்தையைப் பராமரிக்கும் வசதி போதாமையுமே கருகலைப்பை உண்டுபண்ணுவதற்கான முக்கிய காரணங்களாகத் தெரிவித்தனர்.

## சுனாமி

டிசெம்பர் 2004 சுனாமியானது பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களின் சுகாதார சேவை வழங்கலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. சுனாமியில் பிழைத்த பெண்கள் உற்றார், சுற்றார், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் வீடுகளை மாத்திரம் இழக்கவில்லை இவற்றுடன் இனப்பெருக்க சுகாதார சேவைகளையும் இழந்தனர். குடும்ப மற்றும் சமூக கட்டமைப்புகளில் சுனாமி மாற்றங்களை ஏற்படுத்தியது. சுனாமி ஆண்களை விட அதிகளவிலான பெண்களையே பலி கொண்டது. சமூக கட்டமைப்புகள் மற்றும் கிராம சமுதாயங்களில் ஏற்பட்ட சீர்குலைவு, ஒழுங்கின்மைக்குள் தள்ளப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையில் முகாம் சூழ்நிலைகளில் தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையை நோக்குவோமாயின், இளைஞர்கள் மற்றும் யுவதிகள் மத்தியில் இனப்பெருக்க சுகாதார விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முறையான தலையீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் போதுமானதாகத் தென்படவில்லை என்பது புலனாகின்றது.

## முடிவு

வெவ்வேறு போர் சூழ்நிலைகளைப் போலவே, இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் அண்மைப்புற எல்லைக் கிராமங்களில் நடைப்பெறும் போர் மற்றும் யுத்த வன்முறைகளில் பெண்கள் முக்கியமாக பால்ரீதியிலான விதங்களில் பாதிப்புக்குள்ளாகினர். போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் மீதான தாக்கமானது சித்தரிக்கப்படுவது போல ஓர் சாதாரணமான சிறிய விதத்திலான பாதிப்பல்ல.[3] இலங்கையில் போர் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பெண்கள் தங்களது குடும்பங்களின் தேவைகளை பூர்த்தி செய்பவராகவும், வீட்டு பொறுப்புக்களை தனியாக பாரமேற்றுச் சுமப்பவராகவும், பாரதூரமான சூழ்நிலைகளில் சமுதாயங்களை இணைத்துச் செயற்படுபவராகவும் குடும்பங்களிலும் சமுதாயங்களிலும் தலைமைத்துவ பாத்திரங்களை எடுத்து செயற்பட்டு வருகிறார். இன்று பல பெண்கள் வீட்டு தலைமைத்துவத்தை பொறுப்பேற்று நம்பிக்கையுடன் உறுதியாக செயற்பட்டு வருகின்றனர். முன்னர் ஆண்கள் ஆதிக்கம் செலுத்திய பாத்திரங்களில் பெண்களும் ஈடுபட வீட்டு பொறுப்புக்களை தலைமைத்தாங்குவதிலிருந்து பொதுவான விடயங்களான தங்களது நாளுக்கு நாள் தேவைகளை பெற்று வாழ்வதற்கு வழிவகுக்க உள்ளூர் அதிகார சபை அதிகாரிகள், பொலீஸ், இராணுவம் மற்றும் போராளிகளுடன் பேசி தீர்மானிக்கின்றனர்.[4] இவர்களின் செயற்பாடுகள் பொருளாதார நடவடிக்கைகளிலேயே அதிகம் காணக்கூடியதாகவுள்ளது. அரச அதிகாரிகளிடமும் அரசாங்க அலுவலர்களிடமும் சேர்ந்து பேசி தீர்மானிப்பதில் நல்ல அனுபவமும் திறமையையும் பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சட்டங்களை வடிவமைப்பதை பொறுத்தவரையில் பொருளாதார சமூக மற்றும் அரசியல் தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கைகளில் பொதுவாக இலங்கை பெண்களுக்கு மிகவும் குறைவான இடமே வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பிக்கப்படவிருக்கும் மீள்கட்டுமான, சீர்திருத்த மற்றும் மீள்குடியிருப்பு திட்டங்கள் உண்மையாக பயனளிக்க வேண்டுமாயின் இப்பிரதேசங்களில் இது தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் மீள்கட்டுமானம் பெண்களின் தேவைகளை கருத்திற்கொண்டே நடைபெற வேண்டும். பெண்களின் சுயசிந்தனை, சதந்திரம், அவர்களுடைய வாழ்க்கை மற்றும் வாழ்க்கைத் தீர்மானங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்த தங்களுடைய உடல், இனப்பெருக்க செயற்பாடுகள், மற்றும் பாலியல்பு போன்றவை தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை அவர்களுக்கு மிகவும் அவசியம். இவ்வாய்வும் அது தொடர்பாகக் காணப்படும் சுட்டிகளும் பெண் உரிமைகள் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் மீதான போரின் தாக்கத்தை நன்கு உணர்த்துகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட சகல சமுதாயங்களையும் உள்ளடக்கிய நியாயமான நிலையான சமாதானத்தை உருவாக்கும் கட்டமைப்பை உறுதி செய்ய பெண்கள் தமது உள்ளூர் மட்ட வாழ்க்கை அனுபவங்களை இம்முயற்சிகளுக்குள் உள்ளடக்க வேண்டும். ■

டாக்டர் சேபாலி கோட்டேகொட

## குறிப்புகள்

*ஆய்விற்கான அனுசரணையாளர்கள்:*

*மன்னார் பெண்கள் அபிவிருத்தி கூட்டமைப்பு, சூரியா பெண்கள் நிலையம் மட்டக்களப்பு, பெண்கள் அபிவிருத்தி நிலையம் யாழ்ப்பாணம், பாதிக்கப்பட்ட பெண்கள் மன்றம் அம்பாறை, மற்றும் பொலநறுவை பெண்கள் மாவட்ட குழு.*

1. *2003/5ல் பெண் தொடர்பு ஊடகக் கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட முக்கிய விடயங்களின் சுருக்கம் இக்கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.*
2. *இது ஓர் தொடர் ஒப்பீட்டாய்வு என்ற காரணத்தினால் காணப்பாடும் போருக்கு முன்னரான மூலத் தகவல்களுடனும் போரினால் நேரடியாக பாதிக்கப்படாத மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களுடனும் ஒப்பிடப்படும்.*
3. *பெண்களின் அக்கறையும் சமாதான நடவடிக்கைகளும் - கண்டுபிடிப்புக்களும் சிபாரிசுகளும், இலங்கையின் வடகிழக்கிற்கான சர்வதேச பெண்கள் தூதுகுழு 12-17 ஒக்டோபர் 2002, பெண் தொடர்பு ஊடக கூட்டமைப்பு, கொழும்பு.*
4. *மேற்குறிப்பிடப்பட்டதே.*



## உணர்வற்ற நிஜங்கள்

உன்னால்
உருவாக்கப்பட்ட சரித்திரங்களில்
எங்கோ
தொங்கிக்கொண்டிருப்பேன்

உன்னுடன்
ஒன்றி ஒன்றாமல்
வாழும் என்
வாழ்வு பற்றிய
நிஜங்களை

உணர்வற்றதாய்
உணர்கிறாய்

மோப்பம் பிடிக்கும்
உன்
மீசைகளில் சிக்காத
என்
உணர்வுகள்
பரந்த வெளிகள்

உனக்காய்
அவர்களுக்காய்

சுதந்திரமாய் பயணிக்கும்
ஒரு சோடிக் கால்கள்
உன் சரித்திரத்தில்
உனக்காய்

புத்தகத்தில் குந்தியிருந்து
உயரப்பறக்கும்
வண்ணாத்தியாய்
நான்

ஆனால்
உன் சரித்திரத்தில்
நான்
நானாக இல்லாமல்.

கலைமகள் கிருஷ்ணமூர்த்தி
நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# ஓநாய்களின் காலம்

பத்மா சோமகாந்தன்



"நாரியெல்லாம் விண்விண்ணென்று வலிக்குது அசோகா கெதியாக ஹொஸ்ரலுக்குப்போய் படுத்துத் தூங்கினால்தான் விடிய எழும்பி வேலைக்கு வரலாம்."

"ஓம் நில்மினி எனக்கும் சரியான அலுப்பும் களைப்புமாயிருக்கு" அப்போது நேரம் இரவு 9.00 மணி அந்த ஷிப்ட் முடிந்துவிட்டதை அறிவிப்பதற்காக மணி ஒலித்தது.

அன்றுகாலை 6.00 மணிக்கு ஆரம்பித்தவேலை இரண்டு "ஷிப்ட்" தொடர்ந்தாற்போல அந்த ஆடை உற்பத்தித் தொழிற்சாலையில் இயந்திரத்துடன் பணியாற்றியதால் அப்பெண்கள் மிகவும் களைத்துப் போனார்கள். கண்கள் ஓய்வுக்காகக் கெஞ்சின.

புத்தாண்டு விடுமுறை நாட்களையும் சேர்த்துப் பத்து நாட்களுக்கு ஆடை உற்பத்தித் தொழிற்சாலையை மூடி இயந்திரங்களின் தேய்மானங்களைச் சீர்செய்து ஓய்வு கொடுக்கப் போவதாகவும், அதனால் அதற்குமுன் அங்கு பணியாற்றும் தையல் இயந்திரப் பிரிவுப் பெண்கள் இரண்டு "ஷிப்ட்டுகள்" கடமைபுரிந்து வேலைகளை முடித்துவிட வேண்டுமென்றும் நிர்வாகம் கறாராக கட்டளை பிறப்பித்திருந்தது.

அடுத்த "ஷிப்ட்டில்" வேலை செய்ய வேண்டிய பெண்கள் வேக வேகமாக உள்ளே வந்துகொண்டிருந்தனர். அவர்களை விலத்திக்கொண்டு கன்ரீனுக்கு ஓடிப்போய்ப் பாணும் சீனிசம்பலும் வாங்கிக்கொண்டு, தொழிற்சாலைக்கு வெளியே உள்ள வீதியின் பஸ்தரிப்பிடத்துக் வந்தபோது அவர்கள் செல்லவேண்டிய இடத்துக்கான பேருந்து அவ்வீதியில் வந்துகொண்டிருந்தது.

வர்த்தக வலையமென்பதால், அநேக தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் வசதிக்காக இருபத்தி நாலுமணிநேரமும் அடிக்கடி பேருந்துகள் அவ்வீதியில் ஓடிக்கொண்டிருக்கும்.

பேருந்தில் ஏறிக்கொண்ட அசோகாவும் நில்மினியும் இருக்கைகளில் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தனர். உடல் சோர்ந்துவிட்டாலும் எண்ணிப்பாக்கும்போது உள்ளத்தில் சிறு மலர்ச்சி, மகிழ்ச்சி.

தத்தம் கிராமங்களுக்குச் சென்று தாய்மாரிடம் அம்மாச சம்பளப்பணத்தைக் கொடுக்கும்போது, அவர்களின் முகங்களில் பளிச்சிடும் ஆனந்தம், அப்பணத்தைக் கொண்டு வீட்டிலுள்ள தம்பி தங்கைமாருக்கு உடுப்புகள், புத்தாண்டுப்பலகாரச் சாமான்கள் வாங்குவதற்காகச் செல்லும் குதூகலம்...

அடுத்த 10 நிமிடத்தில் அசோகா தனது விடுதிக்குச் செல்வதற்கான பேருந்து தரிப்பிடத்தில் இறங்கிவிடுவாள். அதற்கு அடுத்த பஸ் தரிப்பிடத்தில் இறங்கினால் அருகிலுள்ள நில்மினியின் வாடகை அறையென்ற பெயரிலான புறாக்கூடு போன்ற ஸ்டோர் றூம்.

பேருந்து தரிப்பிடத்தில் நின்றது.

"சரி நில்மினி காலையில் சந்திப்போம்" அசோகா இறங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிப்பிடத்தைத் தாண்டிச் சிறிது தூரம் நடந்தால் அவளின் விடுதிக்குச் செல்லும் ஒழுங்கை வந்துவிடும்.

அவளின் விடுதி ஒரு ஓட்டை உடைசலான பழைய சிறியவீடு, இரண்டு அறைகள்கூட இல்லை. ஒரு மலசல கூடம், குளியலறைக்கு சொட்டுச் சொட்டாகத்தான் தண்ணீர்வரும். அறைகளின் சுவர்களில் கைபட்டால் பொருக்குப் பொருக்காகக் கொட்டுப்படும். தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் கிராமப்புறங்களைச் சேர்ந்த எட்டுப்பத்துப் பெண்கள் அங்கு ஒட்டி ஒடுங்கி வாழ்ந்தனர்.

காலையில் கருக்கலோடு எழுந்து போவதால், பின்புறமுள்ள மறைப்பற்ற கிணறு குளிப்பதற்குக் கைகொடுத்தது.

அதிகாலைக்கருக்கலில்கூட அவர்கள் குளிப்பதைப் பார்த்து நிர்வாணத்தை ரசிப்பதற்காக நாக்கில் எச்சில் வழிந்தபடி சில நாய்கள் நித்திரையை முறித்துக்கொண்டு கண்களைக் கூராக்கி எட்டிப்பார்த்துச் சுவைக்கும்.

> **...கிராமங்களுக்குச் சென்று தாய்மாரிடம் அம்மாச சம்பளப்பணத்தைக் கொடுக்கும்போது, அவர்களின் முகங்களில் பளிச்சிடும் ஆனந்தம்...**
>
> **...வீட்டிலுள்ள தம்பி தங்கைமாருக்கு உடுப்புகள், புத்தாண்டுப்பலகாரச் சாமான்கள்... வாங்குவதற்காகச் செல்லும் குதூகலம்...**

பேருந்திலிருந்து இறங்கி வீதி வெளிச்சத்தில் நடந்துசென்ற அசோகா விடுதிக்குச் செல்லும் ஒழுங்கையைச் சென்றடைந்தபோது, ஒழுங்கை ஒரே இருட்டாக இருந்தது. வேகமாக நடந்து சென்றால் ஏழு நிமிடத்தில் அவளின் இருப்பிடத்தைச் சென்றடைந்துவிடலாம்.

அந்த ஒழுங்கையின் இருட்டு அவளுக்கு அச்சமாக இருந்தது.

"யாரோ காவாலிகள் இன்று மின்கம்பங்களின் 'பல்பு'களுக்கு கல்லெறிந்து உடைச்சுப் போட்டான்கள்"

ஆனாலும் தங்குமிடத்துக்குப் போய்த்தானே ஆகவேண்டும். பயமுறும் வேளைகளில் காவல் தெய்வங்களை நினைத்து-க்கொண்டால், ஒரு தீங்கும் நேராது எனத் தனதுதாய் சிறுவயதில் கூறியவை நினைவுக்குவர சமன், உப்புலுவன், விஷ்ணு, கத்தறகம ஆகிய தெய்வங்களை மனதில் உருப்போட்டபடி அவள் விறுவிறென நடக்கத் தொடங்கினாள். அசோகா நடந்த பாதைக்கு எதிர்ப்புறமாக மின்சூழ் வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. தெய்வம் துணைக்கு வந்துவிட்டதென அவள் எண்ணினாள். சற்றுத்தூரத்தில் அது அணைந்துவிட்டது.

மீண்டும் கசை இருட்டு

எவரோ அவளை நெருங்கி வருவதைப் போன்ற காலடிச் சத்தம்.

"யார் அது? யார் .........? " அவள் கேட்பதற்கு முன்பே மின்சூழ் வெளிச்சம் அவள் கண்களைக் குருடாக்கியது.

அசோகா திகைத்துப் போனாள்.

"நான் தானடி. இந்தக் கவர்ச்சிமானை ருசித்துப் பார்க்க வேணுமென எத்தனை நாளாய்க் கண்வைச்சிருந்தேன். இண்டைக்குதான் அது கிடைச்சிருக்கு. விடமாட்டன்" சாராயவாடை வீசும் கரடுமுரடானகுரல்.

"டேவிட் ஒண்டா? ரெண்டா?" இருட்டுக்குள் தூர நின்று இன்னுமொரு குரல்.

"ஒண்டுதான் சகோதரயா எனக்கு முதல் ...... பிறகு உனக்கு திகைப்பில் உறைந்துபோன அவளின் மேல்சட்டை கிழிக்கப்பட்டது. கீழாடை உரிந்து வீசப்பட்டு அதன்மேல் அவளை வீழ்த்தி....... அவளின் வாயை இறுகப்பொத்தி......

அந்த ஓநாய் அவளின் கன்னங்களை..... மார்புகளைக் கடித்துக்குதறி....... தொடைகளில் இரத்தம் வழிய வழிய......

அவள் மூர்ச்சித்து மயங்கிக் கிடந்தாள்.

"சகோதரயா உனக்கும் வேணுமென்றால் வா"

"வேணாம். புதிசா வேறொண்டு வரும்தானே பாப்பம். உன்ரைபேரை நான் கூப்பிட்டதை அவள் கேட்டிருப்பாள். பொலிஸில் சொன்னாளென்றால் விசாரணை வழக்கு அது இதுவென்று வந்துவிடும். ஆளை முடிச்சுவிடு.

"சரி செய்யிறன் பொலிஸ் எங்கடை "பொஸ்"ஸின்ரைகையிலை விஷயத்தை எப்படித்திருப்பி விடுகிறம் எண்டு பார்"

கூட வந்தவனின் புத்திமதிப்படி மூர்ச்சித்துக்கிடந்த அவளின் தொண்டைக் குழியில் கால்களால் ஏறி மிதித்து........

* * * * *

மறுநாள் அதிகாலை ஷிப்ட் வேலைக்காகச் சென்றுகொண்டிருந்த நில்மினி, அந்த பஸ் நிறுத்தத்தில் அசோகா ஏறாததைக்கண்டு, தனக்கு முன்பே அவள் சென்றிருப்பாள் என எண்ணிக்கொண்டாள். தொழிற்சாலையில் அசோகா வேலைக்கு வராததைக் கண்டு, ஏன்? ஏது நடந்திருக்கும்? சுகமில்லையா என ஏங்கிக் கொண்டிருந்தாள்.

சூரியன் அழுதுவடிந்து அசதியை முறித்துக்கொண்டு புறப்படத் தயாரானபோது அவனின் இளங்கதிர்கள் அந்த ஒழுங்கையை எட்டிப்பார்க்க கூச்சமடைந்தன. இரத்தக்குவியலில்...... நிர்வாண கோலத்தில்..... அசோகாவின் உயிரற்ற உடல்...... இரவுச்சாப்பாட்டுக்கு அவள் வாங்கிவந்த பாண்துண்டங்களை எறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்தன.

ஒரு ஜீப்புடன் பொலிஸாரும் சூழ்ந்து நின்றனர்.

பெண்ணொருத்தி துண்டொன்றைக் கொண்டுவந்து நிர்வாணத்தை மூடினாள்.

விசாரணைக்கெனப் பொலிஸார் அந்த உடலை வண்டியிலேற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஓநாள் அப்போது 'ரிப்ரொப்' பாக உடையணிந்து வேகவேகமாக தனது வண்டியை கொழும்பை நோக்கி ஓட்டியது.

தேர்தல் காலத்தில் அவன் தனது அடாவடித்தனங்களின் மூலமாக பெருமளவு வாக்குளை வேட்டையாடிக் கொடுத்தமையால் அந்த அரசியல்வாதி அவனைத் தனது விசுவாசமான கையாளாக்கி, அலுவலகத்தில் தனது பலவித செயற்பாடுகளின் எடுபிடியாளாக அமர்த்தியிருந்தார். அவரிடம் சென்ற அவன் முன்தினமிரவு நடந்தவைகளைச் சொல்லிக் கைபிசைந்து நின்றபோது.........

"நீ நம்ம ஆள். யாரும் உன்னை ஒன்றும் செய்யமுடியாது. செய்ய வேண்டிய எல்லாவற்றையும் நான் உடனே கவனிக்கிறேன். நீ போய் வேலைகளைக் கவனி" எனக்கூறித் தைரியமூட்டினார்.

அன்று மின் ஊடகங்களின் மதியச் செய்திகளின் போது பின்வரும் செய்தியும் ஒலிபரப்பாகியது.

"வர்த்தக வலையப் பிரதேசத்திலுள்ள ஒழுங்கை ஒன்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். விபசாரத் தொழிலில் ஈடுபட்டுவந்த இரு பெண்கள் தொழில் தகராறு சம்பந்தமாக வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இறந்தவர் கால்தடுக்கி கல்லொன்றின் மீது வீழ்ந்ததால் இம்மரணம் ஏற்பட்டதாகப் பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவருகின்றது. மற்றைய பெண் தலைமறைவாகியுள்ளார். அவரைப் பொலிஸார் தேடிவருகின்றனர்." ■

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■




"என்னடா பேயா"

யாரோ கடுகடுப்பதுபோல் தெரிகிறதே "ா ..... "ா....

ஐயா ஐயாவின் கடுகடுப்பு போத்தல் ராக்கைக்கு......

"அப்படியெண்டா பெண்களுக்கு முடியாது ..... இவ்விடத்தில்

காசு கொடுத்து போத்தலொன்று வேண்ட முடியாது ...."

ஐயா சொகுசு அங்காடியின் மதுவகைகள் உள்ள போத்தல் ராக்கையிடம் வினவுகிறார்.

"சரி சரி....... போயிட்டு வாறன்..... பெண்களுக்கு போத்தல் கொண்டு போனா வீட்டில் பிரச்சனை.....

அது சரியெண்டா கதிரை பிரளும் .... மேசை பிரளும்...

கறிக்கு ஏனடி உப்பு போடயில்ல.... அட இது கருமமடா...."

ஐயாவுக்கு சிரிப்பு .......

"உது எங்களுக்கு தேவையற்ற ஒன்று. அவையளுக்கு போத்தல் விக்கினமெல்லையெண்டா அத அவையள் பாக்கட்டும் ..... அம்மாடியோ... நான் ஒரு

பெண்ணாக இருந்தா சின்ன ஐயாவின் ஸ்பொட்டிலிருந்து

ஒரு அரை.... சும்மா பகிடி பன்னாதீங்கோ ....."

"ஹ..... ஏன் .... யார் அது என்னிடம் ஏன் கேக்குறியள்"

ஐயா இருவேசம் போடுறார்.

- மதுபானம் உடலுக்கு கேடு விளைவிக்கும்
- சமுதாயத்திற்கும் கேடானது
- நல்ல மனிதர்கள் மது அருந்த மாட்டார்கள்
- ஏனென்றால் அது அழிவைத்தரும்
- அப்படியானால் மதுபான உற்பத்தி?
- மது விற்பனை?

அவை அரசு அங்கீகரித்த கைத்தொழில்கள் செய் திட்டங்கள் ........

அதாவது மது பாவனையில் ஆண்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதில்லை. பெண்களுக்கு பாதிப்பு உண்டு. அதனால் மதிப்பிற்காக வியாபாரம் செய்யும் அதிசொகுசு வியாபார நிலையங்களில் அவை "பெண்களுக்கு விற்பனை செய்தல் தடை" என விளம்பரம் போடப்பட்டுள்ளது. ஐயா தன்னிச்சையாக சொல்லி போட்டார். என்னுடைய இன்னொருவருக்கு என்னடா. ■

**கருணா பெரேரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உணர்வு பிடுங்கிகள்

அதிகாலை
அலாரத்தின் கதறலுடன்
தட்டுத்தடுமாறி
கண்விழித்துஎழுந்து
வீட்டு வேலை
தொடக்கம்
காலை மதியம்
சமையல் முடித்து
பள்ளி செல்லும்
பிள்ளைகளோடு
அலுவலகம் செல்லும்
கணவனையும் கவனித்து
அனைவரது
தேவைகளும்
நிறைவேற்றி
பம்பரம்போல்
சுழன்று திரிந்து
தன் அலுவல் முடித்து
உண்டது பாதி
உண்ணாதது மீதியாக
வயிற்றுக்குள் போட்டு
வயோதிபத்
தாயிடம் வந்து
விடை பெற்று
அலுவலகம் நோக்கி
வியர்க்க விறுவிறுக்க
பஸ் பிடித்து
ஏறி நின்றால்
காலோடு காலுரசி
இடை கிள்ளி
தொடை வருடி
இம்சிக்கும்
ஆண்கள் சிலரின்
இம்சைகள்
நாளாந்தம்
தொடரும்
நரக வேதனையாய்

குகநிதி குகநேசன்
[illegible]

ரூ. 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org